ஏன்

இஸ்ரவேல்?

ஒரு ஜனத்திற்காக தேவனின் இருதயம்,
ஒரு தேசத்திற்காக அவருடைய திட்டம்

டெரிக் பிரின்ஸ்

"YEAN ISRAVEL"

This book was compiled from the extensive archive of Derek Prince's unpublished materials and edited by the Derek Prince Ministries editorial team.

2000/1124/LOP

Published by DPM India
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

ISBN : 978-93-92947-40-7
BK-B129-100-TAM

Derek Prince Ministries - India
www.derekprince.com/ta

Derek Prince
MINISTRIES INDIA

பொருளடக்கம்

மனுஷர் நமக்கு விரோதமாக எழும்பினபோது,
கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால்,
கர்த்தர் தாமே நமக்கு பக்கத்திலிராவிட்டால்,
அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில்,
நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள்.
அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து,
வெள்ளங்கள் நமது ஆத்துமாவின்மேல்
பெருகி கொந்தளிக்கும் ஜலங்கள் நமது
ஆத்துமாவின் மேல் புரண்டுபோயிருக்கும் என்று
இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.
நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக
ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.
வேடருடைய கண்ணிக்குத் தப்பின
குருவியைப்போல் நம்முடைய ஆத்துமா தப்பிற்று,
கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்.
நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும்
உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது.

சங்கீதம் 124.

அறிமுகம்

“ஏன் இஸ்ரவேல்" என்ற இந்த மிக முக்கியமான தலைப்பில் நம்முடைய போதனையை துவக்குகையில், ஒரு கேள்வியை கேட்டு நாம் ஆரம்பம் செய்யலாம்: என்ன அடிப்படையில் நாம் இஸ்ரவேலுக்காக ஜெபிக்கிறோம் ? மிக எளிய பதில் “இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" என்பதே (யோவான் 4:22). அறிவுக்கெட்டாத அளவிற்கு, கிறிஸ்தவர்களாகிய நாம் இஸ்ரவேலுக்கு கடன் பட்டிருக்கிறோம். அதின் அடிப்படையில் தான் நாம் அவர்களுக்காக எப்போதும் ஜெபிக்க வேண்டும்.

‘‘இஸ்ரவேலுக்கு நம்முடைய கடன்'' என்ற ஆங்கில புத்தகத்தில், நான் பின்வரும் வாக்கியங்களை எழுதியிள்ளேன்:

> *யூதர்கள் இல்லாவிடில், நமக்கு முற்பிதாக்களும் இல்லை, தீர்க்கதரிசிகளும் இல்லை, அப்போஸ்தலர்களும் இல்லை, வேதாகமமும் இல்லை, இரட்சகரும் இல்லை! இவையெல்லாம் இல்லாமல் நமக்கு என்ன இரட்சிப்பு இருக்கும்? ஒன்றுமிருக்காது!*
>
> *ஆவிக்குரிய சுதந்திரங்களில் விலையேறப் பெற்றவைகளுக்கெல்லாம், பூமியின் சகல தேசங்களும், யூதருக்கே கடனாளிகளாய் இருக்கிறார்கள். நாம் அரபியரோ, ஆப்பரிக்கரோ, ஆசியரோ, ஐரோப்பியரோ, ரஷ்ய நாட்டவரோ, அமரிக்கரோ, சீன நாட்டவரோ - யாராயிருந்தாலும், நம்மெல்லாரையும் குறித்து இது உண்மை. நாம் யூதரிடம் கணக்கிட முடியாத அளவு கடன்பட்டிருக்கிறோம்.*

அந்த அன்பின் கடனை நாம் திரும்ப செலுத்த ஆரம்பிக்க கூடுமானால், அதற்கு சிறந்த வழி ஜெபமும் மன்றாட்டும் தான். தேவனுடைய திட்டங்களில், இஸ்ரவேலுக்கு

உண்டான இடத்தை குறித்த நம்முடைய விழிப்புணர்வு அதிகரிக்க அதிகரிக்க, இஸ்ரவேலின் மக்கள் மற்றும் தேசத்தின் முக்கியத்துவத்தை தெளிவாக புரிந்துக்கொள்ள, நாம் வேதத்தை திருப்புவோம்.

இஸ்ரவேலுக்காகவும், யூதருக்காகவும் நாம் பயனுள்ள விதத்தில் ஜெபிப்பதற்கு, அவர்களை குறித்து நாம் அறிந்துக்கொள்ள வேண்டும். நமக்கு தேவையான அந்த தகவல், உலகத்தின் கண்ணோட்டத்தின்றோ, ஊடகத்தின்றோ வருவதில்லை. அது வேதாகமத்தில் நாம் காண்கின்ற தேவனுடைய கண்ணோட்டத்தினின்று மட்டுமே வருகின்றது.

அதிகாரம் 1
இஸ்ரவேலின் ஒப்பற்ற தனித்தன்மை

இஸ்ரவேல் தேசத்தை போல வேறெந்த தேசமுமில்ல. பரிசுத்த வேதாகமம் இதை மிகவும் தெளிவுப்படுத்துகிறது.

இஸ்ரவேல் என்ற பெயர், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபிலிருந்து வந்த தேசத்தை விவரிக்கின்றது. யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதை நினைவில் கொள்ளுங்கள். அவனுடைய பனிரெண்டு குமாரரிலிருந்து வந்தது தான் இஸ்ரவேலின் பனிரெண்டு கோத்திரங்கள். பின்பு, இஸ்ரவேலின் ஜனங்கள் யூதர் என்று அழைக்கப்பட்டனர். ஆகவே, இன்று யூதர்கள் என்றாலும், இஸ்ரவேல் என்றாலும், அவை ஒன்று தான்.

புதிய ஏற்பாட்டில், இஸ்ரவேல் என்ற பெயர் 77 முறை வருகிறது, இவைகள் ஒருபோதும் சபைக்கு பயன்படுத்தப்படுவதில்லை. இதை மறுபடியும் தெளிவாக கேளுங்கள் - புதிய ஏற்பாட்டில், இஸ்ரவேல் என்ற பெயர் 77 முறை வருகிறது, இவைகள் ஒருபோதும் சபைக்கு பயன்படுத்தப்படுவதில்லை. “யூதன்" என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் எழுபத்தைந்து முறையும், புதிய ஏற்பாட்டில் நூற்று என்பத்து எட்டு முறை வருகிறது. அதே நேரத்தில், “கிறிஸ்தவன்" என்ற பதம் மூன்று முறை மட்டும் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. இந்த எண்கள் இஸ்ரவேல் மக்கள் மீதும், தேசத்தின் மீதும் தேவன் வைத்திருக்கும் முக்கியத்துவத்தை காண்பிக்கிறது.

தனித்தன்மை வாய்ந்த மக்கள்

இந்த முதல் அதிகாரத்தில் இஸ்ரவேல் ஒரு ஒப்பற்ற ஜனம் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இஸ்ரவேலை போல வேறொருவரும் இல்லை. இஸ்ரவேலின் தனித்தன்மையை நாம் சிந்திக்கையில், 1 நாளாகமம் 17:21ல் தாவீது கூறும் வார்த்தைகளை ஆராய்ந்துப்பார்த்து நாம் ஆரம்பிப்போம். தேவனை நோக்கி ஜெபம் பண்ணி, தாவீது கூறுகிறார்:

> *உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? பூலோகத்தில் இந்த ஒரே ஜாதியை தேவனாகிய நீர் உமக்கு ஜனமாக மீட்கும்படி, பயங்கரமான பெரிய காரியங்களினால் உமக்குக் கீர்த்தியை உண்டாக்கி, நீர் எகிப்திற்கு நீங்கலாக்கி மீட்ட உமது ஜனத்திற்கு முன்பாக ஜாதிகளைத் துரத்தி...*

வேறே எந்த ஜாதியையும் மீட்கும்படி தேவன் புறப்படவில்லை என்று இந்த ஜெபத்தில் தாவீது கூறுகிறார். மற்ற ஜாதிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு தேசமாக இஸ்ரவேலை அவர் சித்தரிக்கிறார். சவால்விட முடியாத ஓர் உண்மை இப்பகுதியிலிருந்து வெளிவருகிறது: இஸ்ரவேல் ஒப்பற்றது. இதில் வியக்கத்தக்க உண்மை என்னவென்றால், இந்த ஒப்பற்ற தன்மையை இஸ்ரவேல் தெரிந்தெடுக்கவில்லை, தேவனே அதை தெரிந்தெடுத்தார். இதற்கு அர்த்தம் என்னவென்றால், மற்ற தேசங்களுக்காக ஜெபிப்பது போலவே நாம் இஸ்ரவேலுக்காக ஜெபித்தால், நாம் அவர்களுக்காக வெளிப்பாடின்றி, புரிதலின்றி ஜெபிக்கின்றோம். வேறு விதமாக சொன்னால், வேதத்தின்படி நாம் அவர்களுக்காக ஜெபிக்க மாட்டோம்.

இஸ்ரவேலின் ஒப்பற்ற தன்மையை எடுத்துறைக்கும் முந்தைய வசனமாகிய 20ம் வசனத்தை நாம் பார்க்கலாம்.

சமீப காலத்தில் நான் செய்த ஆராய்வில் தான் 21ம் வசனம் எப்படி முந்தைய வசனத்துடன் நேரடி தொடர்புடையது என்று நான் உணர்ந்தேன். இஸ்ரவேலின் ஒப்பற்ற தன்மை, தேவனுடைய ஒப்பற்ற தன்மையிலிருந்து தோன்றுகிறது, என்பதை புரிந்துக்கொள்வது மிக அவசியம்.

20ம் வசனம் கூறுகிறது:

> *கர்த்தாவே, நாங்கள் எங்கள் காதுகளால் கேட்ட எல்லாவற்றின்படியும் தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத்தவிர வேறே தேவனும் இல்லை. உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ?*

மற்ற தேசங்களுடன் இஸ்ரவேலை நிகராக்கி பார்த்தால், நாம் இஸ்ரவேலுக்காக பயனுள்ள விதத்தில் ஜெபிக்க முடியாது. அவர்கள் தங்கள் தேவனுடைய ஒப்பற்ற தன்மையை வெளிப்படுத்தும் ஒப்பற்ற எதிர்காலமுள்ள, ஓர் ஒப்பற்ற ஜனம். எல்லா தேசங்களுக்காக செய்யும் பொதுவான ஜெபத்தையே இஸ்ரவேலுக்காகவும் செய்தால், அது பயனுள்ளதாகாது. வேதாகமத்தின் உண்மைகள் அவர்களுடைய ஒப்பற்ற தன்மையை உறுதிசெய்கின்றன.

அதிகாரம் 2
ஒப்பற்ற தன்மைகள்

கடந்த அதிகாரத்தில், இஸ்ரவேலின் ஒப்பற்ற நிலைப்பாடை குறித்து நாம் விவாதித்தோம். இந்த அதிகாரத்தில் அந்த நாட்டின் சில ஒப்பற்ற தன்மைகளை குறித்த விவாதத்தை நாம் தொடருவோம்.

யாத்திராகமம் 19:6ல், சீனாய் மலையின் அடிவாரத்தில் கூடி வந்திருந்த இஸ்ரவேலருக்கு தேவன் கொடுத்த வாக் குத்தத்தத்தை நாம் காண்கிறோம் - இது அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தையும், கட்டளைகளையும் கொடுக்கும் முன் நடந்த சம்பவம். தேவன், மோசேயிடம் இஸ்ரவேலுக்கு சொல்ல சொன்னது:

> *நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்*

வேறெந்த நாட்டிற்கும் தேவன் இவ்வார்த்தைகளை கூறினதே இல்லை.

மேசியா யூதர் மூகமாக வந்தார்

ரோமரின் நிரூபம் 9 அதிகாரம், 4 மற்றும் 5 வசனங்களில், இஸ்ரவேலுக்கும் யூதருக்கும் மட்டுமே பொருந்தக்கூடிய பல ஒப்பற்ற தன்மைகளை பவுல் பட்டியலிடுகிறார். இஸ்ரவேலர் என்று அழைக்கும் தன் இனத்தாரை குறித்து பேசுகையில், பவுல் பின் வரும் குறிப்புகளை பட்டியலிடுகிறார்:

- *புத்திரசுவிகாரம் அவர்களுடையது* (தேவன் அவர்களை ஒரு ஜாதியாக தத்தெடுத்தார், தம்முடைய ஜனமாக)
- *மகிமை (கீழ்படிந்து நடந்த வரையில், இஸ்ரவேலோடு இருந்த தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட பிரசன்னம்)*

- *உடன்படிக்கைகள் (இஸ்ரவேல் ஒரு ஜாதியாகும் முன் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் தவிர, வேதாகமத்திலுள்ள உடன்படிக்கைகள் எல்லாம் இஸ்ரவேலோடு செய்யப்பட்டன)*
- *நியாயப்பிரமாணம் (நியாயப்பிரமாணம் இஸ்ரவேலுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது)*
- *தேவாராதனை (ஆசாரிய சேவை) (இஸ்ரவேலுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது)*
- *வாக்குத்தத்தங்கள் (வாக்குத்தத்தங்களும் இஸ்ரவேலுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. பின்பு பவுல் கூறுகிறார்:)*

பிதாக்களும் அவர்களுடையவர்களே (முற்பிதாக்கள் எல்லோரும் அந்த ஒரே வம்சவரலாற்றில் வந்தவர்கள் என்பதை நினைவுக்கூறுவோமாக, வேறெந்த வம்சத்திலிருந்து அல்ல, இஸ்ரவேலிலிருந்தே தோன்றினார்கள்)

- *மாம்சத்தின்படி கிறிஸ்துவும் (மேசியா) அவர்களில் பிறந்தார்*

எல்லா தன்மைகளிலும், கடைசி குறிப்பு மிகவும் ஒப்பற்றது. யூத மக்கள் மூலமாகவே - இஸ்ரவேல் மூலமாக - மேசியாவாகிய இயேசு கிறிஸ்து, உலகத்திற்குள் வந்தார். யூதரையல்லாமல் வேறே யார் மூலமாகவும் அவர் உலகத்தில் வரவில்லை.

இரட்சிப்பு யூதர் மூலமாக வந்தது

யூத மக்களை குறித்து யோவான் 4:22ல் சொல்லப்பட்ட ஒரு முக்கியமான வாக்கியத்தில், இஸ்ரவேலின் இன்னொரு ஒப்பற்ற தன்மை வெளியாக்கப்படுகிறது. இயேசு ஒரு சமாரிய பெண்ணுடன் பேசிக்கொண்டிருக்கிறார்:

நீங்கள் (சமாரியர்) அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுக்கொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது.

அந்த கடைசி வாக்கியம் வெறும் ஐந்து வார்த்தைகள் கொண்டது: “ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது.'' ஆனால் அவைகள் திகைப்பூட்டும் ஐந்து வார்த்தைகளாவன. இரட்சிப்பு எங்கிருந்து வந்தது? யூதரிடமிருந்து. இதுவே அதிர்ச்சி தரும் உண்மை: யூதர் இல்லாவிட்டால், இரட்சிப்பும் இல்லை.

நான் ஒரு புறஜாதியான். ஆனால் என் முழு ஆவிக்குரிய சுதந்திரத்திற்கும், நான் அனுபவித்திருக்கும் எந்த ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்கும், நான் ஒரே ஜாதியாருக்கு கடன்பட்டுள்ளேன் - யூத மக்கள். நான் சொன்னது போல, அவர்கள் இல்லாமல் முற்பிதாக்களும் இல்லை, தீர்க்கதரிசிகளும் இல்லை, அப்போஸ்தலரும் இல்லை, வேதமும் இல்லை, இரட்சகரும் இல்லை. இவ்வைந்து கூறுகளும் இல்லாவிடில், நமக்கு எவ்வளவு இரட்சிப்பு இருக்கும்? ஒன்றுமில்லை! இரட்சிப்பு யூதர்களால் வந்தது. அந்த சத்தியத்தை மனதில் கொண்டு, அதற்கு ஏற்றவாறு நடைப்போடுவது நமக்கு நலமாயிருக்கும்.

அதிகாரம் 3
தீர்க்கதரிசன உறுதிப்பாடு

யூத மக்களின் மற்றொரு ஒப்பற்ற தன்மையை இவ்வதிகாரத்தில் நான் அறிமுகம் செய்ய விரும்புகிறேன் - அவர்கள் முற்றிலும் ஒப்பற்றவர்கள் என்பதை பலமாய் உறுதிப்படுத்தும் ஒன்று: அவர்களுடைய முழு சரித்திரமும் தீர்க்கதரிசனத்தால் முன்னுறைக்கப்பட்டது. வேறே எந்த நாட்டிற்கும் அப்படி நடந்ததில்லை. ஆபிரகாம் தொடங்கி, யூத மக்களின் முழு சரித்திரமும் வேதாகமத்தில் முன்னறிவிக்கப்பட்டது.

இஸ்ரவேலை குறித்த தீர்க்கதரிசன கணிப்புகளின் நிறைவேறுதலை நான் பதினாறு கட்டங்களாக பட்டியலிட்டுள்ளேன். முதல் மூன்று ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டவை.

1. எகிப்தில் இஸ்ரவேலின் அடிமைத்தனம் (ஆதியாகமம் 15:13ல் முன்னுறைக்கப்பட்டது)
2. ஆஸ்திகளோடு எகிப்திலிருந்து இஸ்ரவேலின் மீட்பு (ஆதியாகமம் 15:14ல் முன்னுறைக்கப்பட்டது, அநேக உடமைகளோடு வெளியேறுவார்கள் என்று ஆபிரகாமுக்கு அறிவிக்கப்பட்டது. இங்கு ஆச்சரியமான உண்மை என்னவென்றால், அவர்கள் 400 ஆண்டுகளாக அடிமைகளாக இருந்திருந்தாலும், ஒரே இரவிலே - 24 மணி நேர காலத்திற்குள் - அவர்கள் எகிப்தியரின் செல்வத்தால் செல்வந்தர்களானார்கள்.)
3. அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரிப்பது (ஆதி. 13:12-17ல் ஆபிரகாமுக்கு முன்னறிவிக்கப்பட்டது.)
4. வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் அவர்கள் விக்கிரக ஆராதனைக்கு திரும்புதல்

(உபாகமம் 28:26ல் முன்னறிவிக்கப்பட்டு அப்படியே நிறைவேறினது.)

5. தேவனால் எருசலேமில் ஒரு ஆராதனை ஸ்தலம் ஸ்தாபிக்கப்படுதல் (சங்கீதம் 132:13ல் முன்னறிவிக்கப்பட்டது.)

6. அசீரியரால், இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்ட வட நாட்டின் சிறையிருப்பு (ஏசாயா 7:17ல் முன்னறிவிக்கப்பட்டது.)

7. பாபிலோனியரால், யூதா என்று அழைக்கப்பட்ட தென்தேசத்தின் சிறையிருப்பு (எரேமியா 21:7ல் முன்னறிவிக்கப்பட்டது.)

8. சாலோமோனால் கட்டப்பட்ட முதலாம் ஆலயத்தின் அழிவு (1 ராஜாக்கள் 9:8ல் விரிவாக முன்னறிவிக்கப்பட்டது.)

9. பாபிலோர்லிருந்து ஒரு சிறு கூட்டமான மீதியான வர்களின் திரும்பி வருதல் (எரேமியா 29:10ல் முன்னறிவிக்கப்பட்டது.)

10. இயேசுவின் நாட்களில் இருந்த இரண்டாம் ஆயத்தின் அழிவு (மத்தேயு 24:1-2; இயேசுவால் தீர விவரிக்கப்பட்டது.)

11. கீழ்படியாமையினால், புறஜாதியார் என்று அழைக்கப்பட்ட தேசங்களுக்குள் இஸ்ரவேல் சிதறடிக்கப்படுதல் (பல வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டது, உதாரணத்திற்கு லேவியராகமம் 26:33)

12. புறஜாதியார் மத்தியில் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேலின் துன்புருத்தலும், ஒடுக்கப்படுதலும் (லேவி. 26:38-39ல் முன்னறிவிக்கப்பட்டது). இந்த

தீர்க்கதரிசனம் நிறைவேறினது, தொடர்ந்து நிறைவேறிக்கொண்டும் இருக்கிறது.

13. எல்லா தேசங்களிலிருந்தும் யூத மக்களின் கூட்டி சேர்க்கப்படுதல் (எரேமியா 33 போன்ற பல இடங்களில் முன்னறிவிக்கப்பட்டது). இத்தீர்க்கதரிசனம் நம் கண்கள் முன் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. அதின் நிறைவேறுதல் நடந்துக்கொண்டிருக்கிறது என்பதை புரிந்துக்கொள்வது அவசியம்.

    இதுவரை சரித்திரத்தில் அந்த தீர்க்கதரிசன கணிப்புகளில் 13 நிறைவேற்றப்பட்டாயிற்று. இன்னும் மூன்று நிறைவேற வேண்டும்:

14. எருசலேமுக்கு விரோதமாக சகல தேசங்களும் யூத்தத்திற்கு புறப்பட்டு வருதல் (லூக்கா 21:20ல் முன்னறிவிக்கப்பட்டது.)

15. தன் ஜனங்களுக்கு மேசியாவின் இயற்க்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடு (சகரியா 12:10ல் முன்னறிவிக்கப்பட்டது).

16. தன் ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபிக்க, மகிமையோடும் வல்லமையோடும் மேசியாவின் வருகை (யூதா 14,15 உட்பட, பல இடங்களில் முன்னறிவிக்கப்பட்டது).

பதினாரில், பதிமூன்று கணிப்புகள் நிறைவேறியிருக்க, அது 81 சதவீதம் துள்ளியமாக இது வரை செயலாற்றியிருக்கிறது. இதை மனதில் கொண்டு, மீதமுள்ள மூன்றும் நிச்சயம் நிறைவேறும் என்று நாம் சொன்னால், ஒருவரும் நம்மை பித்தம்பிடித்த வெறியர்கள் என்று நிச்சயம் எண்ண முடியாது.

கிறிஸ்தவர்களுக்கு விசித்திரமான நம்பிக்கைகள் உள்ளன என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால்,

பிரசங்கியாராக மாறும் முன் தொழில்ரீதியாக தர்க்கவியல் பயின்ற எனக்கு, ஒரு புத்தகம் 16ல் 13 கணிப்புகளை துள்ளியமாக அறிவித்துள்ளதென்றால், அப்படிப்பட்ட புத்தகம் கூறும் எந்த கணிப்புகளையும் தீவிரமாக கவர்ப்பது அவசியம்.

அதிகாரம் 4

ஒரு விசேஷித்த மறுமொழி

இந்த அதிகாரத்தில், இயேசுவின் மறு வருகை, அவருடைய ஜனங்களின் இரு பிரிவுகளிலிருந்தும் ஒரு மறுமொழியை எதிர்ப்பார்க்கிறது என்ற கருத்தை நாம் ஆராய்வோம் - அவ்விரு பிரிவுகள் சபை மற்றும் இஸ்ரவேல் ஆவன. வேறு விதமாக சொன்னால், சபையும் இஸ்ரவேலும் ஏற்ற மறுமொழி கொடுக்க ஆயத்தமாகும் வரை, இயேசு திரும்ப வர போவதில்லை.

இயேசு எப்போது திரும்ப வரப்போகிறார் என்பது எனக்கு துள்ளியமாக தெரியாது என்று கூறி நான் ஆரம்பிக்க விரும்புகிறேன். அவருடைய வருகையின் நாளை தீர்மானிப்பது நம்மக்குரியது அல்ல. ஆனால் மத்தேயு 24:3ல், "உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன ?" என்று இயேசுவிடம் கேட்கப்பட்டது.

இந்த கேள்வியை தொடர்ந்து வரும் வசனங்களில், இயேசு பல்வேறு அடையாளங்களை கொடுத்தார், அவற்றினுள் சில தனித்துவமானவைகளும் இருந்தன. ஆனால், அவர்களுடைய கேள்விக்கு அந்த மறுமொழிகளை கொண்டு அவர் பதில் கொடுக்கவில்லை. மத்தேயு 24:14 வரை, "அடையாளத்தை" பற்றி அவர்கள் கேட்டு குறிப்பிட்ட கேள்விக்கு, இயேசு குறிப்பிட்ட பதிலை கொடுக்கவில்லை.

> *ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.*

முடிவு எப்போது வரும் ? ''ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்'' போது. இந்த

மறுமொழியிலிருந்து, அவருடைய வருகை, சபையின் மீது நேரடி பொறுப்பு வைக்கிறதை நாம் காணலாம். அவருடைய வருகைக்கு அடிப்படையாக கூறப்பட்டுள்ளதை செய்ய நாம் பொறுப்புள்ளவர்களாய் இருக்கிறோம்.

யூதரின் இணை பங்கு

தன் வருகையை குறித்து மத்தேயு 23:37-39ல் யூத மக்களோடும் இயேசு ஒரு வார்த்தையை பேசினார்:

> *எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச்சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. (இங்கு “உங்களுக்கோ” என்பது பன்மை சொல் என்பதை கவனியுங்கள்.)*

யூத மக்களுக்கு ஒரு கூட்டு சித்தம் உண்டென்று புரிந்துக்கொள்வது நமக்கு அவசியமானது. அநேக நேரங்களில், தேவன் அவர்களை பன்மையில் தான் குறிப்பிட்டு பேசுகிறார்: ‘‘உங்களுக்கோ (என் ஜனம்) மனதில்லாமற்போயிற்று !"

அந்த வேதப்பகுதி எப்படி தொடர்கிறதென்பதை காண்போம்:

> *‘‘கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்’’ என்று நீங்கள் சொல்லுமளவும் இதுமுதல் என்னை காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

வேறு விதமாக சொல்ல வேண்டுமானால், யூத மக்களுடைய இருதயம் அவரை வரவேற்க ஆயத்தப்படுத்தப்படும் வரை, இயேசு திரும்ப வர போவதில்லை. கிறிஸ்தவர்களிடமிருந்தும் (சபை), இஸ்ரவேலிடமிருந்தும் அவருக்கு ஒரு மறுமொழி அவசியமாக இருக்கிறது.

"நீங்கள் என்னை மறுபடியும் காண போவதில்லை - நான் வலுக்கட்டாயமாக என்னை உங்கள் மேல் திணிக்கமாட்டேன். நீங்கள் என்னை வாஞ்சையோடு எதிர்ப்பார்க்கும் வரை; நீங்கள் என்னை யார் என்று உணர்ந்து, என்னை நோக்கி கூப்பிடும் வரை நான் திரும்பி வர போவதில்லை" என்று இயேசு கூறுகிறார்.

அதிகாரம் 5
தேவன் எதிர்ப்பார்ப்பது என்ன?

தேவையான மறுமொழியை குறித்து இன்னும் இந்த அதிகாரத்தில் நாம் பார்ப்போம். முக்கியமான கேள்விகளை நாம் முன்நிறுத்துவோம், “தேவன் இஸ்ரவேலில் என்னத்தை தேடுகிறார் ? அவர் எதற்காக காத்திருக்கிறார் ?"

சாந்தம் மற்றும் மனத்தாழ்மை

தேவன் எதிர்ப்பார்க்கும் மறுமொழியை குறித்து, நாம் முன்வைத்த கேள்விகளுக்கு முதலாவது பதிலை அளிக்க, நாம் செப்பனியா 3:11-13ஐ பார்க்கலாம். இந்த வாசனங்களை ஆராயும் முன், இந்த பகுதியில் இஸ்ரவேலுக்கு எந்த அளவு செய்தி இருக்கிறதோ, அதே அளவு சபைக்கும் ஒரு செய்தி இருக்கிறது.

> *எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி, நீ செய்த உன் எல்லாக் கிரியைகளினிமித்தமும் அந்நாளிலே வெட்கப்படாதிருப்பாய்; அப்பொழுது நான் உன் பெருமையைக்குறித்துக் களிகூர்ந்தவர்களை உன் நடுவிலிருந்து விலக்கிவிடுவேன்; நீ இனி என் பரிசுத்த பர்வதத்தில் அகங்காரங்கொள்ளமாட்டாய்.*

எவ்விதமான பண்பிற்கு தேவன் இந்த பகுதியில் மறுப்பு தெரிவிக்கிறார் ? சமய பெருமை. மக்கள் பெருமை கொள்வதற்கு பல காரணங்கள் உண்டு ஆனால் மதம் தான் அந்த பட்டியலில் முதன்மையாக இருக்கிறது.

தேவன் தன் யூத மக்களை பார்த்து, “நான் உங்களை தெரிந்துக்கொண்டதின் நிமித்தம், என் ஆலயத்தை உங்கள் மத்தியில் வைத்திருப்பதின் நிமித்தம், உங்களை நான் குறிப்பாக அழைத்ததின் நிமித்தம், நீங்கள் பெருமை

கொள்ளாமல் இருக்க கற்றுக்கொள்ளும் வரை, நான் திரும்ப வருவதில்லை" என்று கூறுகிறார்.

அதற்கு பின் தேவன் கூறுகிறார்:

> *உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன்; அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள். இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ் செய்வதில்லை; அவர்கள் பொய் பேசுவதுமில்லை; வஞ்சகநாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப் படுவதுமில்லை;*

திரும்ப வரும்போது, இஸ்ரவேலில் தேவன் என்னத்தை காண எதிர்ப்பார்க்கிறார் ? ஒரு சாந்தமும், மனத்தாழ்மையுமான ஜனம். சபையில் தேவன் எதனை தேடுகிறார் ? அதே தான் - ஒரு சாந்தமும் மனத்தாழ்மையிமான ஜனம்.

அமெரிக்கா மற்றும் பல நாடுகளிலுள்ள சபைகளில் நாம் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சனை - பெருமை. தேவனுக்கு முன் நாம் மெய்யாகவே நம்மை தாழ்த்த ஆயத்தமாக இருக்கிறோமா ?

இந்த குறிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனென்றால் இது சபைக்கும் இஸ்ரவேலுக்கும் இருக்கும் ஒப்புமைக்கு நம்மை மறுபடியும் கொண்டு வந்து நிறுத்துகிறது. இரண்டு இடங்களிலும், சாந்தமும் மனத்தாழ்மையுமான ஒரு ஜனத்தை சேர்த்துக்கொள்ளவே இயேசு வருகிறார்.

மதவாத மக்களிடம் மிகப்பெரிய பிரச்சனை பெருமை தான். அது யூதர்களை குறித்தும், எல்லா சபை பிரிவை சேர்ந்த கிறிஸ்தவர்களை குறித்தும் உண்மை. இந்த அதிகாரத்தில், நம்முடைய ஆராய்வின் மூலம், ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு மிக முக்கியமான ஒரே பாடத்தை நாம் கற்றுக்கொண்டுள்ளோம்: தேவன் சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் தேடுகிறார்.

அதிகாரம் 6
இஸ்ரவேல் தேசம்

இந்த புத்தகத்தின் முதல் பகுதியில், இஸ்ரவேலின் ஜனங்கள் என்ற தலைப்பை நாம் அராய்ந்தோம். இந்த அதிகாரம் துவங்கி, தற்காலத்து அரசியலில் மிகவும் விவாதத்திற்குரிய தலைப்பின் மீது கவனம் செலுத்த விரும்புகிறேன். அந்த தலைப்பு என்ன ? இஸ்ரவேல் தேசத்திற்கான தேவனுடைய திட்டம்.

தற்காலத்து ஊடக மொழியில் இஸ்ரவேல் தேசம் தவறாக பாலஸ்தீன் என்று அழைக்கப்படுகிறது. அதை பாலஸ்தீன் என்றழைப்பது, வேதாகம சத்தியத்திற்கு முற்றிலும் மாறுபட்டது. பாலஸ்தீன் என்பதற்கு பெலிஸ்தியரின் தேசம் என்று அர்த்தம். ரோமர், அதை கைப்பற்றி, இரண்டாம் தேவாலயத்தை அழிக்கும் வரை, அந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டதே இல்லை. யூதர்களுக்கு இனிமேல் அந்த பகுதியின் மேல் உரிமையில்லை என்பதை வலியிறுத்த, பாலஸ்தீன் என்ற பெயரை பயன்படுத்தினர். அது வேண்டுமென்றே தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு யூத விரோ தமான வார்த்தை.

வேதாகமத்தின் அடிப்படையில் இஸ்ரவேலின் தேசம், யோசுவாவால் கைப்பற்றப்படும் வரை கானான் தேசம் என்று அழைக்கப்பட்டது. ஆனால் புதிய ஏற்பாட்டில் இத்தேசம் இஸ்ரவேல் தேசம் என்றழைப்பட்டது.

ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம்

இந்த விவாதத்திற்குரிய தலைப்பை ஆராய ஆரம்பம் செய்யும் விதமாக, இந்த விசேஷமான மற்றும் முக்கியத்துவமான

தேசத்தை குறித்து தேவன் என்ன சொல்கிறார் என்பதை காண்போம். ஆதியாகமம் 17ம் அதிகாரம், 7–8 வசனங்களில் தேவன் ஆபிரகாமுக்கு தரிசனமானார். அந்நேரத்தில், அவனோடு உடன்படிக்கையும் செய்தார். அது முற்றிலும் அவருடைய இறையான்மைக்கு அடுத்த காரியமாக இருந்தது. இந்த உடன்படிக்கையை பொருத்த மட்டிலும், ஆபிரகாம் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இதை தான் செய்யப்போகிறேன் என்று தேவனாகவே முடிவெடுத்தார். அவர் ஆபிரகாமுக்கு சொன்னார்:

> *உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்திரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்.*

வேதத்தை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும், அந்த தேசம் யாருடையது என்ற விவாதத்திற்கே இடமில்லை என்பது மிக தெளிவாக இருக்கிறது. அந்த தேசத்தினுள் இஸ்ரவேல் இருந்தாலும், அதற்கு புறம்பாக இருந்தாலும், அதில் எந்த வித்தியாசமுமில்லை. வேதத்தின் அடிப்படையில், மேல் கூறப் பட்ட வசனத்தின்படி, தேவன் அதை அவர்களுக்கு “நித்திய சுதந்திரமாக" கொடுத்துள்ளார்.

ஒரு உறுதியான அர்ப்பணிப்பு

சங்கீதம் 105ல், வேதாகமத்திலேயே மிக முக்கியமான பகுதியாக நான் கருதும் ஒரு பகுதி உண்டு. இத்தேசத்திற்கான தேவனுடைய திட்டம் மற்றும் முழு அர்ப்பணிப்பின்

அறிக்கையும் அதில் உள்ளது. இஸ்ரவேலுக்காக, தேவனுடைய உடன்படிக்கையை - காக்கும் எண்ணங்களை அது வெளியரங்கமாக விவரிக்கின்றது. நாம் 7ம் வசனத்தில் ஆரம்பிக்கிறோம்:

அவரே நம்முடைய தேவனாகிய கர்த்தர், அவருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியெங்கும் விளங்கும். (வேறு வார்த்தைகளில் சொன்னால், தேவன் கட்டளையிடும் காரியம் பூமியின் சகல பகுதிகளிலும் செல்லுபடியாகும்.) ஆயிரந்தலைமுறைக்கென்று அவர் கட்டளையிட்ட வாக்கையும், ஆபிரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கையையும் ...அவர் யாக்கோபுக்குப் பிரமாணமாகவும், இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாகவும் உறுதிப்படுத்தி...

சங்கீதம் 105ன் நான்கு வசனங்களுக்குள், இந்த தேசத்திற்கு நேராக தமக்கிருக்கும் பூரண அர்ப்பணிப்பை, வேதாகமத்தில் வேறெங்கும் உள்ளதை விட மிக திடமான மொழியில் தேவன் வெளிப்படுத்துகிறார் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளை நான் பட்டியலிடட்டும்: உடன்படிக்கை, வார்த்தை, கட்டளை, பிரமாணம் மற்றும் நித்திய உடன்படிக்கை. இது தான் மிகவும் முக்கியமான கேள்வி: இத்தகைய பூரண, அதிகாரப்பூர்வ, தடையற்ற அர்ப்பணிப்பை தேவன் எதற்கு செய்கிறார் ? 11ம் வசனத்தில் இந்த கேள்விக்கான பதிலை காண்கையில் நான் அதிர்ச்சியடைகிறேன்:

உங்கள் சுதந்தரபாகமான கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார்.

அவ்வார்த்தைகள் எல்லாம் - உடன்படிக்கை, வார்த்தை, கட்டளை, பிரமாணம் மற்றும் நித்திய உடன்படிக்கை - தேவன் கானான் தேசம் முழுவதையும் தருகிறதை குறித்து பேசுகின்றன. அந்த உடன்படிக்கைக்கு

விரோதமாக செயல்படுபவர்கள், தேவனுக்கே விரோதமாக செயல்படுகிறார்கள் என்ற அர்த்தத்தை தேவனுடைய அவ்வார்த்தைகளின் பெலனும், தெளிவும் உள்ளடக்குகின்றன.

இஸ்ரவேலின் திரும்பி வருதல்

கடைசி நாட்களில், யூத மக்கள் தங்கள் சுதந்திரத்திற்கு திரும்புவதை குறித்த எண்ணற்ற பகுதிகளில், எரேமியாவில் ஒரு பகுதி உள்ளது:

> *இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பி, நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்ப வரப்பண்ணுவேன்; அதை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*
>
> *எரேமியா 30:3*

வேதாகமத்தை ஓர் அளவு அறிந்தவர்கள் கூட, தேவன் அபிரகாமுக்கும், அவன் சந்ததிக்கும் கொடுத்த தேசம் கானான் தேசம் தான் என்பதை அறிந்திருப்பார்கள். இப்பகுதிகான பெயர் இஸ்ரவேல் தேசம் என்று மாறியது - அதை தான் பரிசுத்த தேசம் என்று அழைக்கிறோம். தேவன் சொல்லுகிறார், காலம் நிறைவேறும்போது, நான் சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேல் மற்றும் யூதாவின் சந்ததியாரை, அவர்கள் பிதாகளுக்கு கொடுத்த தேசத்துக்கு திரும்ப கொண்டு வருவேன்.

அதிகாரம் 7
தேவனுடைய இறையாண்மை

தேவனுடைய இறையாண்மையில் நீங்கள் நம்பிக்கையுடையவரா ? நான் நிச்சயமாக நம்புகிறேன். தேவனுடைய இறையாண்மைக்கு நான் கொடுக்கும் பொருளடக்கம் இது தான்: தேவன் விரும்புவதை செய்கிறார், தாம் விரும்பும் விதத்தில் அதை செய்கிறார், தான் நினைக்கும் நேரத்தில் செய்கிறார், அதற்கு யாருடைய அனுமதியையும் அவர் கேட்பதில்லை.

தற்காக்கப்பட்ட ஓர் உடன்படிக்கை

நாம் சிந்தையில் கொள்ள வேண்டிய ஒரு இன்றியமையாத கோட்பாடு இது தான்: தேவன் தம்முடைய உடன்படிக்கைகளை காக்கிறார். கிறிஸ்தவர்களாகிய நமக்கு இது மிகவும் முக்கியமான சத்தியம் ஏனென்றால் தேவனோடிருக்கும் நம்முடைய உறவே இயேசுவின் இரத்தத்தின் மூலம் செய்யப்பட்ட உடன்படிக்கையை அடிப்படையாக கொண்டுள்ளது. சபை தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலுக்கு பதிலாக இடம்பெற்றுள்ளது என்ற ‘‘மாற்று இறையீயல்'' உங்களுக்கு போதிக்கப்பட்டிருந்தால், இந்த தெளிவுண்டாக்கும் கேள்வியை நீங்கள் உங்களையே கேட்டுக்கொள்ள வேண்டும், ‘‘இஸ்ரவேலோடு செய்த உடன்படிக்கையை தேவன் முறிக்கக்கூடுமானால், சபையோடு செய்த உடன்படிக்கையை அவர் ஏன் முறிக்கக்கூடாது ?" ஆனால் உண்மை இதோ: அவர் தமது வாக்குத்தத்தங்களை முறிக்கமாட்டார் ஏனென்றால் அவர் உடன்படிக்கையை முறிக்கிறவரல்ல. அவர் உடன்படிக்கை செய்தார், அந்த உடன்படிக்கையை காத்துக்கொண்டும் இருக்கிறார். அது நற்செய்தி. அது ஆச்சரியமானது !

அதிகாரம் 8
இஸ்ரவேலும் கிறிஸ்துவின் வருகையும்

தேவனுடைய திட்டங்களில் இஸ்ரவேல் மையத்தில் இருப்பதை குறித்து இன்னொரு முக்கியமான கூர்நோக்கு என்னவென்றால், கிறிஸ்துவின் மறுவருகை இஸ்ரவேல் தேசத்தையே மையமாக கொண்டுள்ளது.

எருசலேமில் உச்சக்கட்டம்

சகரியா 12-14 ஆகிய அப்புத்தகத்தின் கடைசி மூன்று அதிகாரங்களும், கர்த்தருடைய வருகையின் காலத்தோடு தொடர்புடையவை. அந்த அதிகாரங்களின் துவக்கத்தில் நாம் பார்க்கலாம், சகரியா 12:1-3:

> *இஸ்ரவேலைக்குறித்துக் கர்த்தர் சொன்ன வார்த்தையின் பாரம்; வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் நான் எருசலேமைத் தத்தளிப்பின் பாத்திரமாக்குகிறேன்; எருசலேமுக்கு விரோதமாய்ப் போடப்படும் முற்றிகையிலே யூதாவும் அப்படியேயாகும். அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள்.*

இந்த யுகத்தின் உச்சக்கட்டம் நியூயார்க், லண்டன் அல்லது டோக்கியோ நகரங்களில் நடைபெறபோவதில்லை என்பதை

இப்பகுதி நமக்கு தெளிவுப்படுத்துகிறது. அது எருசலேமில் நடைபெற போகிறது. உலகத்தின் கடைசி நாடகத்தின் காட்சி அமைப்பு அது தான்.

கர்த்தருடைய வருகை

புதிய ஏற்பாட்டில், ஒலிவ மலையிலிருந்து இயேசு பரத்திற்கு ஏறி சென்றபோது, பரத்தை நோக்கி நின்ற சீஷர்களை பார்த்து, தூதர்கள் சொன்னார்கள்:

> *கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிர்கிறீர்கள்? உங்களிடத்திர்ன்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.*
>
> *அப்போஸ்தலர் 1:11*

இயேசு ஒலிவ மலையிலிருந்து எழுந்து போனார், அவர் ஒலிவ மலைக்கே திரும்பி வருவார். அவர் மேகத்தில் ஏறி போனார், மேகத்தில் திரும்ப வருவார். அந்த வசனம் அப்படியே நிறைவேறும்.

இது தான் காலத்தின் கடைசிக்கு இருக்கும் சூழ்நிலை. நான் சுட்டி காண்பிக்க விரும்புவது இது தான்: *இயேசுவின் வருகைக்கு முன் இருக்கும் கடைசி காலத்தை குறித்து முன்னறிவிக்கப்பட்ட யாவும் இஸ்ரவேலை, எருசலேமை, தேசத்தை மற்றும் மக்களையே மையமாக கொண்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொன்னால், அவைகள் சரியான இடத்தில் இல்லாவிட்டால், இயேசுவின் வருகை நடைபெறாது.*

அதிகாரம் 9

அவருடைய வருகைக்கான ஆயத்தம்

இந்த அதிகாரத்தில், இஸ்ரவேல் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதென்று நாம் காணலாம். உதாரணத்திற்கு, ஐக்கிய நாடுகளின் சபையில், குறைந்த பட்சம் பாதி தீர்மானங்களாவது, இஸ்ரவேலை குறித்து தான் செய்யப்பட்டுள்ளன என்பதை அறிந்திருக்கிறீர்களா ? இதைவிட வேடிக்கையான ஒன்றை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா ? நிச்சயமாக ஒரு காரணம் இருக்க வேண்டும்.

நாம் எப்போதெல்லாம் செய்தித்தாளையோ, தொலைக்காட்சியையோ பார்க்கிறோமோ, இஸ்ரவேல் என்னும் அந்த ஒரு சிறிய நில பகுதியை குறித்து ஏன் ஏதாவது ஒரு செய்தி இருக்க தான் செய்கிறது ? உலகம் என்னும் பெரும் வாளியிலொரு சிறு துளிப்போல் இருக்கும் ஒரு நில பரப்பை குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த அழுத்தம், எதிர்ப்பு மற்றும் போராட்டத்திற்கு காரணம் என்ன ? இந்த அதிகாரத்தில், அக்கேள்விகளுக்கான பதில்களை நாம் ஆராயலாம்.

அவர்கள் அறிந்துக்கொள்வார்கள்

ஏற்கெனவே கூறப்பட்டுள்ளதை போல், சகரியா 12, 13 மற்றும் 14ம் அதிகாரங்கள் எல்லாம், இந்த யுகத்தின் முடிவிலுள்ள இஸ்ரவேல் தேசத்தை குறித்தே பேசுகின்றன. சகரியா 12ல் இச்சித்திரத்தின் இறுதி நிறைவை காணலாம். சகரியா 12:10ல் தேவன் பேசுகிறார், அவர் கூறுகிறார்:

> *நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும்.*

(தேவன் கிருபையின் ஆவியை கொடுக்காவிட்டால் நீங்கள் விண்ணபஞ்செய்ய முடியாது என்பதை கவனியுங்கள். அவர் கிருபையின் ஆவியை உங்களுக்கு அருளும் போது, நீங்கள் விண்ணப்பம் செய்து மறுமொழி கொடுக்கலாம்.)

அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறான வனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.

தன் ஜனங்களை குறித்து ஆண்டவர், “தாங்கள் (யூத மக்கள்) குத்தின என்னை நோக்கிப் பார்ப்பார்கள்" என்று கூறுகிறார். இந்த வசனத்தை என்ன என்று புரிந்துக்கொள்ளாமலேயே யூத மக்கள் இதை வாசிப்பது, வியக்கத்தக்க ஒன்றாகும். அவர்கள் ஆண்டவரை சிலுவையில் அறைவார்கள் என்ற இவ்வாக்கியம் வேதாகமத்திலேயே இங்கு தெளிவாக இருக்கிறது: “தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்ப்பார்கள்."

அடுத்ததாக, “தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" என்று கூறுகிறது. பரிசுத்த ஆவியினால், தன் ஜனமாகிய யூத மக்களுக்கு, இயேசுவை குறித்த ஒரு வெளிப்பாடு வருகிறது. இறுதியாக அவர் யார் என்பதை அறிந்துக்கொள்வார்கள். அதற்கு பின்பு இஸ்ரவேலின் சரித்திரத்தில் இதுவரை உண்டாகாத ஒரு புலம்பல் ஏற்படும்.

“நம்முடைய மேசியாவை சிலுவையில் அறைந்துவிட்டோம். நம்முடைய தேவனை நிராகரித்து தள்ளிவிட்டோம்'' என்பதை முதல் முறையாக உணருவார்கள். அந்த வசனம் தொடர்கிறது:

அந்நாளிலே மெகிதோன் பட்டணத்துப் பள்ளத்தாக்கின் ஊராகிய ஆதாத்ரிம்மோனின் புலம்பலைப்போல எருசலேமின் புலம்பல் பெரிதாயிருக்கும். தேசம் புலம்பிக்கொண்டிருக்கும்; ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாகப் புலம்பும்; தாவீது குடும்பத்தார் தனியேயும்...

மத்தேயு மற்றும் சகரியாவிலிருந்து இந்த சத்தியங்களை ஒன்றாக நாம் சேர்த்தால், கர்த்தர் வரும் முன், சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை அவைகள் தெளிவுப்படுத்துகின்றன. யூத மக்கள் எருசலேமிலும், தேசத்திலும் மறுபடியும் ஸ்தாபிக்கப்பட வேண்டும், ஏனென்றால் அது நடைபெறாத வரை, இயேசு திரும்ப வரமாட்டார்.

அதற்கு பின், அவர்களுடைய இருதயங்களை இயேசுவிடம் திருப்ப, அவரை குறித்த ஓர் இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடு உண்டாக வேண்டும்.

சாத்தான் மிக பெரிய பயம்

இந்த யூகத்தின் தேவனான சாத்தானின் மிக பெரிய பயம் என்ன என்பதை யூகித்து செல்ல சொன்னால், நீங்கள் என்ன பதில் அளிப்பீர்கள் ? அவன் எதை குறித்து மிகவும் பயப்படுகிறான் என்று யோசிக்கிறீர்கள் ? அந்த கேள்விக்கான என்னுடைய பதில் நேரடியான, எளிய பதிலாக இருக்கும்: இயேசுவின் வருகை. பிசாசுக்கு ஏன் அது அவ்வளவு பயமூட்டுகிறதாக உள்ளது ? ஏனென்றால் இயேசு வரும் வரை, அவன் அநேக போராட்டங்களில் தோல்வியடையலாம் ஆனால் யூத்தத்தில் அவர் தோற்பதில்லை. அவன் அநேக ஆத்துமாக்களை இழக்கலாம் ஆனால் அவன் இன்னமும் இந்த யுகத்தின் தேவனாக தான் இருப்பான். இயேசு திரும்ப வரும் வரைக்கும் அந்நிலை மாற்றம் அடையாது. ஆகவே,

இயேசுவின் வருகை என்ற சம்பவத்தை குறித்தே பிசாசு மிகவும் பயம் அடைகிறான். அந்த சம்பவத்தை கூறித்து அவன் மிகவும் பயம் அடைகிறான் என்றால், அவன் அந்த சம்பவத்தை மிக அதிகமாக எதிர்ப்பான் என்பது சரியாக தானே இருக்கிறது ? இயேசுவின் வருகைக்காக வழியை ஆயத்தம் செய்யும் எந்த நடவடிக்கைகளுக்கும் விரோதமாக அவன் கடுமையான எதிர்ப்பை கட்டவிழ்க்கிறான்.

நாம் வேதத்திலிருந்து பார்த்தது போல, இயேசு வரும் முன், எருசலேமை தங்கள் பட்டணமாகக்கொண்டு, யூத மக்கள் தேசத்தில் குடியிருக்க வேண்டும். இந்த உண்மையை அங்கிகரிப்பது மிக முக்கியம், ஏனென்றால், இஸ்ரவேலை குறித்து இன்று நாம் காணும் எல்லா கிளர்ச்சி மற்றும் பரபரப்பின் பின்னணியில் இந்த வாக்குத்தத்தம் உள்ளது.

கர்த்தருடைய வருகைக்கு வழியை ஆயத்தம் செய்யும் சூழலில் இந்த மிக முக்கியமான படியை தடை செய்ய, தன்னால் இயன்ற யாவையும் சாத்தான் செய்துக்கொண்டிருக்கிறான்.

இதுவரை, இஸ்ரவேல் மக்களை குறித்தும், நிலத்தை குறித்தும் அநேக வேதாகம உண்மைகளை நாம் ஆராய்ந்து வந்தோம். இயேசுவின் வருகைக்கு முன், இஸ்ரவேல் மக்கள் தங்கள் தேசத்தில் நிலைநாட்டப்படுவதின் அவசியம், சாத்தானின் மிக பெரிய பயத்தை தட்டி எழுப்புகிறது என்பதையிம் நாம் காண்கிறோம். ஆகவே, தேசங்களினுள் இதுவே மிக பெரிய குழப்பத்திற்கான ஊற்றாகவே இது அமைந்துள்ளது.

இந்த போதனையை அடிப்படையாக கொண்டு, இஸ்ரவேலுக்காக ஜெபிக்க சரியான அணுகுமுறையை காண நாம் ஆயத்தமாயிருக்கிறோம். அங்கிருந்து, இஸ்ரவேல் ஜனங்கள் மற்றும் தேசத்திற்காக, தேவனுடைய கண்ணோட்டத்திலிருந்து சில குறிப்பிட்ட ஜெபங்களை நாம் ஏறெடுக்க கடந்து போவோம்.

அதிகாரம் 10

தேவனுடைய வார்த்தையிலிருந்து வழிநடத்துதல்

நாம் இஸ்ரவேலுக்காக சிறப்பாக ஜெபிப்பதை குறித்து சிந்திக்கும் போது, ஒரு முக்கியமான உண்மையை நாம் அங்கிகரிக்க வேண்டும். வேதாகமத்தில் அங்கிகரிக்கப்பட்ட ஜெபங்கள் மட்டுமே பதில்களை பெறும். இது ஏன் அவ்வளவு முக்கியம் ? ஏனென்றால், தேவனுடைய நோக்கங்களுக்கு புறம்பான அல்லது எதிரான ஜெபங்கள் பலனற்றிருக்கும் என்பதை நாம் காண வேண்டும்.

நாம் தேவனுடைய வார்த்தையின் அளவுகோல்களுக்கு உள்ளாக ஜெபிக்க வேண்டும். தேவன் செய்வேன் என்று சொல்லாத ஒன்றை அவர் செய்ய வேண்டும் என்று நாம் கேட்க கூடாது. அதனால் தான், தேவன் இஸ்ரவேலுக்கு வைத்திருக்கும் தீர்க்கதரிசன நோக்கங்களை குறித்த தெளிவான புரிதல் நமக்கு தேவை. அவர்களுக்காக பயனுள்ள விதத்தில் ஜெபிக்க, அந்த அறிவு நமக்கு உதவி செய்யும்.

உம்முடைய வார்த்தையின் படி

புதிய ஏற்பாட்டில், மேசியாவின் தாயாக இருக்க போகிறாள் என்ற வியப்பூட்டும் செய்தி கன்னி மரியாளுக்கு அளிக்கப்பட்டது. தூதன் அந்த செய்தியை அவளிடம் முதலில் கொடுத்த போது, அதை அவள் புரிந்துக்கொள்ளவில்லை. அது எப்படி ஆகும் என்று அவளுக்கு தெரியாதிருந்தும், ‘‘உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது'' என்று கூறினாள்.

கன்னியின் மூலம் உண்டான மேசியாவின் பிறப்பே, எந்த மனிதனும் அனுபவித்த அற்புதங்களில் எல்லாம் மேலான அற்புதம். ''உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது'' என்று அவள் சொன்னபோது அது நிறைவேறியது.

தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையை விட உயர்வான ஒன்றை நீங்கள் ஜெபத்தில் முன் வைக்க முடியாது. தேவன் ஏற்கெனவே நடக்கும் என்று சொன்னவைகளை ஜெபத்தின் மூலம் செயலுக்குள் கொண்டு வருவதே பரிந்து மன்றாடுபவரின் மிக பெரிய செயல்களில் ஒன்று. இதற்காக தான், தேவன் எருசலேமின் அலங்கங்கள் மேல் பரிந்து மன்றாடுபவர்களை வைத்திருக்கிறார்.

உதவியாளரின் பணி

ஏசாயா 62ல், பரிந்து மன்றாடுபவருக்கான எபிரெய வார்த்தை மஸ்கீர் என்பதாகும். அதற்கு அர்த்தம், மற்றவருக்கு நினைப்பூட்டும் ஒருவர். ஆகவே, எபிரெய புரிந்துக்கொள்ளுதலின் படி, பரிந்து மன்றாடுபவரின் வேலை, உதவியாளரின் வேலைக்கு சமமானது - குறிப்பேட்டில் ''செய்ய வேண்டியவை'' என்று குறிப்பிட்டிருப்பவைகளை முதலாளிக்கு நினைப்பூட்டுபவர்.

தேவன் தமது தீர்க்கதரிசன நாள்காட்டியில் என்ன குறிப்பிட்டிருக்கிறாரோ, பரிந்து மன்றாடுபவர்களாக, அதை அவருக்கு நினைப்பூட்டுவதே நமது வேலை. ''உம்முடைய வார்த்தையில் நீர் சொல்லியிருக்கிற பிரகாரம் செய்யும்'' என்று நீங்கள் தேவனிடம் சொல்லுகிறீர்கள். பரிந்து மன்றாடுதலில், இந்த எளிய குறிப்பை விட இன்னும் அதிகம் இருந்தாலும், இது தான் நமது வேலையின் அடிப்படை. ஆகவே, பரிந்து மன்றாடுபவர் தேவனுடைய வார்த்தையை நன்கு அறிந்திருக்க வேண்டும். தேவனுடைய நோக்கங்கள்

மற்றும் அவைகளின் செயல்பாடுகளை குறித்தும் தெளிவான பார்வை இருக்க வேண்டும்.

ஆகவே, ஜெபத்திற்கான சரியான அணுகுமுறையில், இது முதல் முக்கிய கோட்பாடாகும். இஸ்ரவேலுக்காக நீங்கள் ஜெபிக்கும் போது, தேவனுடைய வார்த்தையின் அளவுகோல்களுக்குள் அடங்கியிருங்கள்.

அதிகாரம் 11
நன்றிசெலுத்துதல் மற்றும் துதி

ஜெபத்திற்கான சரியான அணுகுமுறை நாம் தொடர்ந்து பார்க்கையில், அடுத்து வரும் அறிவுறை சங்கீதம் 100:4ஐ அடிப்படையாக கொண்டுள்ளது:

அவர் வாசல்களில் துதியோடும் (ஆங்கிலத்தில், நன்றி செலுத்துதலோடும்), அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து...

துரதிஷ்டவசமாக, பல கிறிஸ்தவர்கள் இந்த அடிப்படை கோட்பாடை அறியாதிருக்கிறார்கள். தேவனுடைய நேரடி பிரசன்னத்திற்குள் செல்வதற்கு, நன்றி செலுத்துதல் என்னும் வாசல்கள் மற்றும் துதி என்னும் பிரகாரங்கள் வழியாக தான் செல்ல முடியும்.

இஸ்ரவேலுக்காக ஜெபிக்கும் போதும் இந்த கோட்பாடு பொருந்தும். இஸ்ரவேலுக்காக பயனுள்ள விதத்தில் ஜெபிக்க, நன்றி செலுத்தி ஆரம்பிப்பதே மிக சிறந்தது. இந்த கோட்பாடுக்கு, தேவன் நமக்கு ஓர் உதாரணத்தை எரேமியா 31:7ல் தந்திருக்கிறார்:

யாக்கோபினிமித்தம் மகிழ்ச்சியாய்க் கெம்பீரித்து, ஜாதிகளுடைய தலைவரினிமித்தம் ஆர்ப்பரியுங்கள்.

எத்தனை முறை சங்கீதத்தில் “ஆர்ப்பரி" என்ற வார்த்தையை வாசித்திருக்கிறீர்கள் ? நீங்கள் ஆர்ப்பரித்ததுண்டா ? நான் மக்களிடம், “நான் பாடகன் அல்ல, ராகத்தை பிடித்து பாட முடியாது, ஆனால் என்னால் ஆர்ப்பரிக்க முடியும்" என்று எப்போதும் சொல்லுவேன். ஆர்ப்பரிக்க நமக்கொரு கடமையுண்டு. அதே நேரத்தில் சரியான நேரத்தையும், இடத்தையும் அதற்கு நீங்கள் தேர்வு செய்ய வேண்டும்.

ஆனால், முணுமுணுக்காதீர்கள். தெளிவாக, தைரியமாக, எவ்வளவு சத்தமாக முடியுமோ – *ஆர்ப்பரியுங்கள்!*

அறிக்கையிடுதலின் வல்லமை

நம்முடைய நன்றி செலுத்துதல் மற்றும் துதியின் இன்னொரு அம்சம் அதே வசனத்தில் இருக்கிறது:

> *யாக்கோபினிமித்தம் மகிழ்ச்சியாய்க் கெம்பீரித்து, ஜாதிகளுடைய தலைவரினிமித்தம் ஆர்ப்பரியுங்கள்; சத்தத்தை கேட்கப்பண்ணி (ஆங்கிலத்தில்: அறிக்கையிட்டு)*

அறிக்கையிடுதல் என்பது, ஒரு சூழ்நிலையினுள் தேவனுடைய வார்த்தையை கட்டவிழ்ப்பதாகும்.

தைரியமாக, விசுவாசத்தோடு நீங்கள் தேவனுடைய வார்த்தையை எந்த சூழ்நிலையிலும் அறிக்கை செய்கிறீர்கள். அப்படி செய்வதால், அச்சூழ்நிலையினுள் நீங்கள் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை கட்டவிழ்க்கிறீர்கள். எரேமியா 31:7ல் உள்ள இந்த வசனத்தில் தேவன் கூறுவது போல, ‘‘சத்தத்தை கேட்கப்பண்ணுங்கள்.'' வேறு வார்த்தைகளில் சொன்னால், ‘‘இஸ்ரவேலின் எதிர்காலத்திற்குள் என்னுடைய வாக்குத்தத்தங்களை கட்டவிழ்த்து விடு."

அடுத்ததாக, ‘‘துதித்து,'' அதன் பின், ‘‘கர்த்தாவே இஸ்ரவேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும் என்று சொல்லுங்கள்." அந்த ஒரே வசனத்தில் - எரேமியா 31:7ல் - ஐந்து செயல்களை செய்ய தேவன் அறிவுறுத்துகிறார்: பாடு, ஆர்ப்பரி, அறிக்கைசெய், துதி மற்றும் ஜெபி. “கர்த்தாவே இஸ்ரவேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும்" என்று சொல்வது, சந்தேகமில்லாமல் ஜெபத்தை குறிக்கின்றது.

தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு நாம் கொடுக்கக் கூடிய 5 மறுமொழிகள் இவை தான். பாடு, ஆர்ப்பரி, அறிக்கைசெய், துதி மற்றும் ஜெபி. இந்த எல்லா செயல்களின் முடிவில் தான் ஜெபம் வருகிறதென்று பார்த்தீர்களா ? அதற்கு முன்னிருக்கும் கட்டங்களை கடந்து வருவதே ஜெபத்தை பயனுள்ளதாக்கும்.

ஆகவே, தேவனுடைய வாசல்களில் நன்றியோடும், அவருடைய பிரகாரங்களில் துதியோடும் பிரவேசிக்க நாம் தீர்மானிப்போமாக. குறிப்பாக, அவர் இஸ்ரவேலுக்காக செய்துக்கொண்டிருக்கிற, செய்யப்போகிறவைகளுக்காக நாம் அவருக்கு நன்றியையும், துதியையும் செலுத்தலாம்.

அதிகாரம் 12

பாவங்களை அறிக்கையிடுதல்

ஜெபத்திற்கான சரியான அணுகுமுறையை நாம் பார்த்து வருகையில், பாவத்தை அறிக்கையிடுவதை குறித்த ஒரு விவாதத்தை இதில் சேர்ப்பது அவசியமாகும்.

உண்மையாக பரிந்துமன்றாடுபவர், தீவிரமாக ஜெபிப்பவர் மட்டுமல்ல, அவர் தேவனுக்கு முன்பாக பாவத்தை அறிக்கை செய்யவும் வருகிறார். இதற்கு மிக சிறந்த உதாரணம் தானியேல். பழைய ஏற்பாட்டில் குறிக்கப்பட்ட மிகப்பெரிய நீதிமான்களில் இவர் ஒருவர்.

அடையாளம் காணுதல்

தானியேல் மிகவும் நீதிமானாக இருந்தாலும், அவர் தன் ஜனத்தின் பாவத்தோடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். நீங்கள் பரிந்துமன்றாடுபவராக இருந்தால், நீங்கள் தேவனுக்கு முன்பாக நின்று "அவர்கள் பாவம் செய்திருக்கிறார்கள்" என்று சொல்ல முடியாது. அத்தகைய மனநிலை தேவனிடத்தில் உங்களுக்கு எதையும் சாதிக்காது. "நாங்கள் பாவம் செய்தோம்" என்று நீங்கள் சொல்ல வேண்டும்.

நீங்கள் எதற்காக ஜெபிக்கிறீர்களோ, உங்கள் குடும்பம், உங்கள் சுதந்திரம், உங்கள் கலாச்சாரம், உங்கள் தேசம், அல்லது எந்த சூழ்நிலைக்காக ஜெபித்தாலும், அதனோடு உங்களை அடையாளப்படுத்திக்கொள்வது அவசியம். இஸ்ரவேலை குறித்து தானியேல் 9ம் அதிகாரம் 5ம் வசனத்தில் கூறுகிறார்:

நாங்கள் பாவஞ்செய்து...

அவர்கள் பாவஞ்செய்து என்று தானியேல் கூறாமல், நாங்கள் பாவஞ்செய்து என்று தானியேல் கூறுகிறார். பின்பு அவர் தொடருகிறார்:

அக்கிரமக்காரராயிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, கலகம்பண்ணி, உம்முடைய கற்பனைகளையும், உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்றுபோனோம்.

இது இஸ்ரவேலை குறித்த உண்மையா ? நிச்சயமாகவே உண்மை.

உமது நாமத்தினாலே எங்கள் ராஜாக்களோடும் எங்கள் பிரபுக்களோடும் எங்கள் பிதாக்களோடும் தேசத்தினுடைய சகல ஜனங்களோடும் பேசின தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கேச் செவிகொடாமற்போனோம். ஆண்டவரே உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபடியால், நாங்களும் எங்கள் ராஜாக்களும் எங்கள் பிரபுக்களும் எங்கள் பிதாக்களும் வெட்கத்துக்குரியவர்களானோம். ஆனாலும் எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு.

நாம் அந்த பகுதியை தொடர்ந்து வாசித்துக்கொண்டே போகலாம், ஆனால் அதின் வடிவமைப்பை பார்க்கிறீர்களா ? நாம் சுயநீதி உள்ளவர்களாய் இருக்க முடியாது. நாம் எந்த குழுவின் பிரதிநிதியாக நிற்கிறோமோ, அவர்கள் பாவங்களை அறிக்கை செய்யும் கோட்பாடை நாம் பயிற்றுவிக்க வேண்டும். தானியேலை போல, நாம் பிரதிநிதியாக நிற்க வேண்டும், ஏனென்றால், அவர் நீதிமானாய் இருந்தார். ஆனாலும், தன் சக யூதரை குறித்து, “அவர்கள் பாவம் செய்தார்கள்" என்று அவர் சொல்லவில்லை, “நாங்கள் பாவம் செய்தோம்" என்று கூறுகிறார்.

தனிப்பட்ட முறையில் நான் நம்புவது என்னவென்றால், பாபிலோனிலிருந்து இஸ்ரவேலுக்கு யூதர் திரும்புவதற்கு, தானியேலின் ஜெபமே வழியை திறந்தது. அறிக்கை, பயனுள்ள பறிந்துமன்றாட்டின் அத்தியாவசிய பகுதி என்பதை இந்த உதாரணம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது. நாம் இந்த அறிக்கையின் செயலில் பங்குள்ளவர்களாக இருக்கலாம், ஆனால் இந்த செயலை தேவன் புறஜாதியார் மற்றும் யூதர், இருவர் மத்தியிலும் கட்டவிழ்க்கவேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும்.

அதிகாரம் 13

தேவனுடைய ஆவியினாலே

ஜெபத்திற்கான சரியான அணுகுமுறையை கையாள்வதை குறித்து நாம் தொடர்கையில், சகரியா 4:6ல், தேவன் செருபாபேலுக்கு சொன்ன வார்த்தையை நாம் பார்க்கலாம்:

> *பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனை களின் கர்த்தர் சொல்லுகிறார்.*

தேவன் பலத்தையும், வல்லமையையும் தெளிவாக அறிந்திருக்கிறார், அவை அனைத்தும் அவரிடம் உண்டு. ஆனால், மனித பலனும் வல்லமையும், சட்டங்களும், ராணுவ பலனும் தேவையானதை சாதிக்காது என்று கூறுகிறார். அவைகள் மனிதர்களுடைய இருதயங்களை மாற்றி அமைக்காது. அதை செய்ய கூடிய ஒரே நபர் பரிசுத்த ஆவியானவர் தான்.

இஸ்ரவேலிலுள்ள அரசியல் சூழலை குறித்து நாம் வருத்தம் அடையலாம் (நம்முடைய தேசங்களை குறித்தும் நாம் வருந்தலாம்). ஆனால், தேவன் அதிக பாவத்தை பொறுத்துக்கொண்டு, தன் ஜனத்திற்காக காத்திருக்கிறார் என்பதை மனதில் கொள்ளுங்கள். இந்த பாவத்தை அவர் அங்கிகரிப்பதில்லை ஆனால் அதை பொறுத்துக்கொண்டிருக்கிறார். மாறுதல்களை ஏற்படுத்தக்கூடிய ஒரே வல்லமை, பரிசுத்த ஆவியானவரின் மறைபொருளான, காணப்படாத வல்லமையே.

கடினமான கல்லிலிருந்து, துடிப்பான, பணிவுள்ள மாம்சமாக மாற்றப்பட்ட இருதயமுள்ள ஜனத்தை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட ஜனங்கள் அவருக்கு கிடைக்கும் வரை, தேவன் காத்துக்கொண்டே இருப்பார்.

அந்த செயல்தொடரை தடுக்கும் தடைகள் இருக்கலாம், ஆனால், ‘‘நான் தேடும் ஜனத்தை நான் பெற்றுக்கொள்ளுமளவும் நான் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று தேவன் கூறுகிறார். இந்த மாறுதல் பரிசுத்த ஆவியான வரால் மட்டுமே உண்டாகும்.

பரிசுத்த ஆவியானவர் இஸ்ரவேலின் மேல் கட்டவிழ்க்கப்பட வேண்டும் என்று ஜெபிப்பதே, மிக பெரிய மற்றும் பயனுள்ள மன்றாட்டின் ஜெபமாகும். இது நிறைவேற ஆரம்பித்து விட்டது, ஆனால் இன்னும் அதிகமாக அது நடைபெற வேண்டும்.

அதிகாரம் 14
சீயோன் மேல் இரக்கம்

சங்கீதம் 102, வசனங்கள் 13 மற்றும் 18ன் படி ஜெபிப்பதே சரியான அணுகுமுறையின் இன்னொரு வழியாகும். மிகுந்த வியாகுலத்தின் மத்தியில் சங்கீதக்காரனுக்கு கொடுக்கப்பட்ட வெளிப்பாடு இது - அவர் தன் சுயத்தின் முடிவுக்கு வந்திருந்தான். தேவன் தன்னை உயர்த்தின பின், தன்னை தள்ளிவிட்டது போல உணர்ந்தான். இதை விட மோசமாக இருக்கக்கூடியது என்ன ?

அந்த சங்கீதத்தின் முதல் சில வசனங்கள் ஒரு துக்கக்கரமான புலம்பலாக இருக்கின்றன. சங்கீதக்காரனை போல, நீங்களும் மனச்சோர்வோடு போராடிக்கொண்டிருந்தால் (இது அநேக கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் பொதுவான மனநிலை சார்ந்த பிரச்சனை), சங்கீதக்காரன் செய்ததையே நீங்களும் செய்யலாம். அவன் தன் பிரச்சனைகளை விட்டு, தேவனை நோக்க ஆரம்பித்தான்.

உங்கள் பிரச்சனைகளின் மீது நீங்கள் கவனம் செலுத்தும் வரை, அவைகளோடே நீங்கள் வாழ வேண்டியதிருக்கும். உண்மையை சென்னால், வெகு அதிகமாக உங்கள் பிரச்சனைகளை நீங்கள் உற்று கவனிப்பீர்களானால், அதற்கு தீர்வே இல்லை என்று நம்ப ஆரம்பித்துவிடுவீர்கள். அதை விட, 12ம் வசனத்தில் சங்கீதக்காரன் சொல்வதை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்:

> *கர்த்தராகிய நீரோ என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய பேர் பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும்.*

இந்த அறிக்கையை செய்த உடனேயே, சங்கீதக்காரனின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டது.

சீயோனை கட்டியெழுப்புதல்

இந்த மாற்றப்பட்ட கண்ணோட்டத்தின் மத்தியில், யூத மக்களை கடைசி காலத்தில் தேவன் சந்திப்பதை குறித்து, சங்கீதக்காரனுக்கு ஒரு வெளிப்பாடு உண்டானது:

> *தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர்; அதற்கு தயை செய்யுங்காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது.*

அடுத்த பகுதி சொல்லுகிறது:

> *கர்த்தர் சீயோனை கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார். அப்பொழுது ஜாதிகள் கர்த்தருடைய நாமத்துக்கும், பூமியிலுள்ள ராஜாக்களெல்லாரும் உம்முடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்.*

இஸ்ரவேலின் சார்பாக தேவன் தலையிடுவதே, தன்னுடைய மகிமையை ஜாதிகளுக்கு வெளிக்காட்டுவதற்கே. ஒரு ஆங்கில வேதாகமத்தின் மொழிப்பெயர்ப்பு இப்படியாக சொல்லுகிறது: "தேவன் சீயோனை கட்டும் போது, தம்முடைய மகிமையில் வெளிப்படுவார்." நாம் காலத்தின் இறுதிக்கு வருகிறோம் என்றும், தேவன் மகிமையோடு வெளிப்பட போகிறார் என்பதற்கும் மிக பெரிய அடையாளங்களில் ஒன்று, தேவன் சீயோனை கட்டுவதே. தேவனை நேசிக்கும் ஒவ்வொருவரும், சீயோன் மறுகட்டப்படுதலை காண சந்தோஷப்பட வேண்டும். குறித்த காலம் நெருங்கி வர, நாம் தேவனிடம் இரக்கத்தையும் தயையும் கேட்க தொடருவோமாக.

அதிகாரம் 15
குறித்த நேரம்

இஸ்ரவேலுக்காக ஜெபிப்பதில் ஒரு முக்கியமான அம்சம் என்னவென்றால், அது தேவனால் முன்குறிக்கப்பட்ட காலங்களை அடையாளம் காண்பதாகும். சங்கீதம் 102ல், நாம் கடந்த அத்தியாத்தில் பார்த்தது போல, "அதற்கு தயை செய்யிங்காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது'' என்று சங்கீதக்காரன் கூறுகிறார். குறித்த நேரம் என்பதற்கான எபிரெய வார்த்தை மொயெட் என்பதாகும். இஸ்ரவேலில் புனிதமாய் கருதப்படும் எல்லா பண்டிகைகளுக்கும் பயன்படுத்தப்படும் வார்த்தை இது - பஸ்கா, பெந்தேகோஸ்தே, யோம் கிப்பூர், புது வருடம் - அனைத்திற்குமே பயன்படும்.

"ஆண்டவரே, சீயோனுக்கு தயை செய்ய குறித்த காலம் இதுவே. நீர் சொன்னதை தயவுசெய்து செய்யும்" என்று சொல்வதே, மிக பயனுள்ள மன்றாட்டுகளில் ஒன்றாகும்.

தேவனுக்கு நினைப்பூட்டுதல்

இந்த கோட்பாடை விளக்கும் விதமாக, நாங்கள் 1938 தொடங்கி, சாப்பாடு நேரங்களில், எங்கள் ஸ்தோத்திரங்களோடு இணைத்திருக்கும் ஒரு கோட்பாடை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். காலப்போக்கில், இதில் சிறிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

நாங்கள் கூறும் ஸ்தோத்திரங்கள், இவ்வதிகாரத்தில் நாம் முன்வைக்கும் குறிப்பை வலியிறுத்துகிற ஒரு எளிய வழியாகும்: இஸ்ரவேலுக்காக செய்யும் ஜெபத்திற்கான சரியான அணுகுமுறை தேவனுடைய குறித்த காலங்களை குறித்த அறிவை உட்படுத்தும்.

அன்பின் பரலோக தந்தையே, எங்கள் ஆகாரத்தையும், அதை உண்டுப்பண்ணின கரங்களையும் ஆசீர்வதியும். இஸ்ரவேலுக்கு இரக்கத்தையும், தயையையும் இந்த குறித்த நேரத்தில் காண்பியும். அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன் மற்றும் ஆங்கிலம் பேசும் உலகத்தின் அனைத்து மக்களுக்கும் எழுப்புதலை அனுப்பும். எங்கள் சாவுக்கேதுவான சரீரங்களை உமது பரிசுத்த ஆவியால் உயிர்ப்பியும். நாங்கள் ஞானமாய் ஆகாரம் புசிக்க எங்களுக்கு உதவி செய்யும்.

அதற்கு பின்பு, ஒரு அறிக்கை செய்வோம் - உதாரணத்திற்கு 1 தெசலோனிக்கெயர் 5:23-24:

சமாதானத்தின் தேவன் தாமே எங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக; எங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம், அண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் வருகையில் குற்றமற்றதாய் காக்கப்படுவதாக. எங்களை அழைத்தவர் உண்மையிள்ளவர், அவர் அப்படியே செய்வார்.

அந்த அறிக்கையை நான் இணைத்ததற்கு காரணம், தேவன் குறித்த காலத்தில் செய்வேன் என்று சொன்னதை செய்யும்படி ஜெபிப்பதன் பயனை நமக்கு நினைப்பூட்டவே.

அதிகாரம் 16
முன்முடிவுகளை தவிர்த்தல்

ஜெபத்திற்கான அணுகுமுறையில் ஒரு கடைசி அறிவுறை, நாம் தவிர்க்க வேண்டிய ஒரு செயலை குறித்ததாகும். நாம் ஜெபிக்கும் போது, ஊகித்தலை விட்டுவிட வேண்டும். தேவன் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் அவருக்கு சொல்ல கூடாது.

இப்படிப்பட்ட போக்குக்கு உங்களை நீங்களே விட்டுக்கொடுப்பதை உணர்ந்திருக்கிறீர்களா ? அப்படியானால், ஏசாயா 40க்கு நாம் திருப்பி, 13ம் வசனத்திலிருந்து வாசிக்க ஆரம்பிக்கலாம்:

> *கர்த்தருடைய ஆவியை அளவிட்டு, அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்து, அவருக்கு போதித்தவன் யார்? தமக்கு அறிவை உணர்த்தவும், தம்மை நியாயவழியிலே உபதேசிக்கவும் தமக்கு ஞானத்தைக் கற்றுக்கொடுக்கவும், தமக்கு விவேகத்தின் வழியை அறிவிக்கவும், அவர் யாரோடே ஆலோசனை பண்ணினார்?*

‘‘உன் ஆலோசனை எனக்கு தேவை என்று நினைக்கிறாயா ? உன்னால் நான் போதிக்கப்பட வேண்டுமா ?" என்று தேவன் கேட்கிறார். இது கிறிஸ்தவர்களின் பொதுவான தவறாகும். தேவனுக்கு தங்களுடைய ஆலோசனை தேவை என்று நினைக்கிறார்கள் - என்ன செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும் என்று தேவனுக்கு சொல்லி கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

கர்வமுள்ள பாவம்

என் தனிப்பட்ட அனுபவத்திலிருந்து உங்களுக்கு நான் ஒரு சிறிய ஆலோசனை கொடுக்கிறேன் - நானும்

ரூத்தும் கடினமான விதத்தில் கற்ற பாடங்கள். நாங்கள் உணராமலேயே, எங்கள் வாழ்வில் பெரிதளவு பெருமை இருக்கக்கூடும் என்று கற்றுக்கொண்டுள்ளோம்.

சங்கீதம் 19லிருந்து நாங்கள் ஒரு வேத வசனத்தை அறிக்கை செய்துக்கொண்டிருந்தோம்: "தன் பிழைகளை உணருகிறவன் யார் ? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்." தேவன் எங்கள் வார்த்தையின் படியே செய்தார். அந்நேரத்தில், தேவனை தேடுவதற்கு, ஹவாயில் சில காலம் ஓய்வுக்கு சென்றோம்; எங்கள் மறைவான குற்றங்களை குறித்து எங்களுடன் இடைப்பட ஆரம்பித்தார். தேவன் வேதத்திலிருந்து எனக்கு காண்பித்த மிக முக்கியமான உண்மைகளில் ஒன்று என்னவென்றால், பாவங்கள் மன்னிக்கப்பட ஒரே வழி, அவைகளை அறிக்கை செய்வது தான்.

> *நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*
> *1 யோவான் 1:9*

நீங்கள் பாவங்களை அறிக்கை செய்யாத போதிலும் தேவன் உங்களை நேசிக்கிறார் - ஆனால் உங்கள் பாவங்கள் இன்னும் மன்னிக்கப்படவில்லை. எங்களுக்கு மறைவான குறைவுகள் அநேகம் இருந்ததை நானும் ரூத்தும் கண்டுப்பிடித்தோம். அவைகளை சாராம்சப்படுத்தி சொல்ல வேண்டுமானால் - அகந்தையுள்ள பாவங்கள் - என்று தான் கூற வேண்டும். அகந்தை என்பதற்கு ஒரு சுருக்கமான, எளிய வார்த்தை என்ன தெரியுமா ? பெருமை.

இந்த உண்மையை நாங்கள் கண்டுக்கொண்டபோது, தமக்கு முன்பாகவும், ஒருவருக்கு ஒருவர் முன்பாகவும்

எங்களை தாழ்த்த தேவன் விரும்பினார். இது தான் சுய தாழ்மைக்கு என்னுடைய வழிமுறை: உங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்யுங்கள். நீங்கள் திருமணமானவரானால், அவைகளை உங்கள் துணைவி/துணைவரிடம் அறிக்கை செய்யுங்கள். உங்கள் பாவங்களை அவர்களிடம் அறிக்கை செய்த பின் அவர்களிடம் அகந்தையிடன் பேசுவது கடினம். வெற்றியுள்ள பரிந்துமன்றாடுதலுக்கு, இது அத்தியாவசியமான படியாகும்.

பாவத்தின் தடை

ஏசாயா **59:1-2**ல் இதற்கு ஒத்த ஒரு கோட்பாடை நாம் காண்கிறோம். இவை யூதருக்கு சொல்லப்பட்டவை என்று புறஜாதியாரான கிறிஸ்தவர்கள் எப்போதும் நினைக்கின்றனர். உண்மையை சொன்னால், இவை யூதருக்கும் புறஜாதியாருக்கும் பொருந்தத்தக்கவையே:

> *இதோ இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.*

பதிலைப்பெறும் ஜெபத்திற்கு ஒரே மேலான தடை என்னவென்றால், பாவம் தான். பாவம் இனப்பிரிவையோ, சபை பிரிவையோ மதிப்பதில்லை. நம்முடைய ஜெபங்களுக்கு உண்மையாகவே பதில் வேண்டுமானால், நம்முடைய மறைவான பாவங்களை சுட்டி காண்பிக்க நாம் தேவனுக்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

தேவனிடம் அகந்தை காண்பித்துள்ளோம். சுமார் 250 முறை வேதம் “தேவனுக்கு பயப்படும் பயத்தை" குறித்து பேசுகிறது.

அகந்தையிலிருந்து நம்மை பாதுகாக்க, அத்தகைய மனநிலையே நமக்கு தேவை.

இஸ்ரவேலுக்காக ஜெபிப்பதல் சரியான வழிமுறையை கையாளும் விதமாக, நம்மை நாமே தாழ்த்தி, பெருமையை அகற்றி, தேவனுக்கு ஆலோசனை சொல்வதை விட்டுவிடுவோமாக. இந்த படிகளை பின்பற்றுவதால், நாம் அகந்தையை தவிர்த்து சரியான மனநிலையுடன் ஜெபிப்போம்.

அதிகாரம் 17
இஸ்ரவேலுக்கான சிறந்த ஜெபம்

இப்புத்தகத்தின் முந்தைய பகுதிகளில் நாம் இஸ்ரவேலின் மக்கள் மற்றும் தேசத்தை குறித்து விவாதித்தோம். கடைசியாக இஸ்ரவேலுக்காக சரியான விதத்தில் ஜெபிப்பதில் முடிவடைந்தோம். இப்போது அதற்கு ஜெபிப்பதற்கு வேதம் முன் வைக்கும் சில குறிப்பிட்ட மைய கருத்துக்களை நாம் ஆராயலாம்.

"என் இருதயத்தின் வாஞ்சை"

நீங்கள் ஜெபிக்கக்கூடிய மிக சிறந்த ஜெபம், ரோமர் 10:1ல் பவுல் ஜெபித்த ஜெபமாகும்:

> *சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச்செய்யும் விண்ணப் பமுமாயிருக்கிறது.*

ஒரு நபர் இரட்சிக்கப்படாவிட்டால், அந்த நபர் தொலைந்துப் போனவராகவே இருக்கிறார். மூன்றாவது நிலை என்பது இல்லை - இரண்டிற்கும் நடுவே வேறொன்றும் இல்லை. யூதனோ, புறஜாதியானோ, அவர்கள் வாழ்வில் இரட்சிப்படைவதே மிக முக்கியமான படியாகும், அவர்கள் இரட்சிப்படைந்திருக்கிறார்கள் என்பதை அறிய வேண்டும். இஸ்ரவேலில் நடப்பவைகளை குறித்தும், யூத மக்கள் தங்கள் தேசத்தில் மீண்டும் நாட்டப்படுவதை குறித்தும், சிலருக்கு இருக்கும் பரபரப்பை குறித்து எனக்கு சில நெருடல்கள் உண்டு. ஏன் அப்படி சொல்கிறேன் ? ஏனென்றால் ஒரு நபர் யூதரா இல்லையா என்பதே முக்கியம் என்பது போல் சில கிறிஸ்தவர்கள் நினைக்கவும் செயல்படவும் செய்கிறார்கள். அது அப்படி அல்ல !

இயேசு யோவான் 8:24ல் யூத மக்களிடம் சொன்னர்:

நானே அவர் (மேசியா) என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.

இது, ஒரு யூதன், யூதர்களிடம் பேசுவதாகும். யூதர்களுக்கென்று தனிப்பட்ட, விசேஷ இரட்சிப்பில்லை. அவர்கள் யூதர்களான படியால், அவர்கள் நுழைய கூடிய பின் வாசல் எதுவும் இல்லை. இரட்சிப்புக்கென்று ஒரே வாசல் தான் உண்டு - இயேசு. யோவான் 10:9ல், இயேசு சொன்னார், "நானே வாசல். என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்."

ஆகையால், நீங்கள் இஸ்ரவேலுக்காக ஒரே ஒரு ஜெபம் செய்யபோகிறீர்கள் என்றால், அவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

ஒரு முன்நிபந்தனை

நாம் ஏற்கெனவே விவாதித்தது போல, இஸ்ரவேலின் இரட்சிப்பிற்கான (மற்றும் கிறிஸ்துவின் வருகைக்கான) ஒரு முன்நிபந்தனை, யூதர்கள் தங்கள் தேசத்தில் இருப்பது தான். இஸ்ரவேல் அனைத்தும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்த பின், இந்த நிபந்தனையுடன் ஆண்டவர் திரும்ப வருவதற்கான அடுத்த குறிப்பிட்ட நிபந்தனையையும் நாம் நிறைவேற்ற வேண்டும். அந்த முன்நிபந்தனை, ரோமர் 11:25ல் உறுதி செய்யப்பட்ட புறஜாதியாரின் அறுவடையாகும்:

புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலிலொரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்.

தேவனால் இரட்சிப்பிற்கென்று நியமிக்கப்பட்ட ஒவ்வொரு புறஜாதியானும் இராஜ்யத்திற்குள் வரும் வரை, இஸ்ரவேல் அனைத்தும் இரட்சிப்படையாது. ஆகவே, நாம் இஸ்ரவேலை குறித்து அக்கரையுள்ளவர்களாக இருந்தால், புறஜாதியாரின் இரட்சிப்பை குறித்து அக்கரையிள்ளவர்களாக இருக்க நமக்கு மிக முக்கியமான காரணம் உண்டு.

தேவனுடைய இறுதி நோக்கம்

புறஜாதியாரின் இரட்சிப்பு, யூதரின் அறுவடைக்கு வழிவகுக்கும் என்பதை நாம் அங்கீகரிக்கும் போது, இவ்விஷயத்தில் தேவனுடைய உள்ளத்தை புரிந்துகொள்ள, அது நமக்கு உதவுகிறது.

பல நேரங்களில், ‘‘அநேக நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு தேவன் மனுகுலத்தின் பயங்கரமான பொல்லாப்பை ஏன் பொறுத்துக்கொண்டிருக்கிறார் ? எதற்காக காத்திருக்கிறார் ?'' என்று நாம் கேட்பதுண்டு. “தனக்கான ஒரு ஜனத்திற்காக காத்திருக்கிறார்'' என்பதே என்னுடைய பதிலாக இருக்கிறது.

அதை தான் தேவன் சரித்திரத்திலிருந்து பெற்றுக்கொள்ள போகிறார். ஒரு அமைப்பை அல்ல; பல கட்டிடங்களை அல்ல, பல அரசாங்க திட்டங்களை அல்ல. அவர் தமக்காக ஒரு ஜனத்தை பெற்றுக்கொள்ள போகிறார்.

தீத்து 2:11-14ஐ கொண்டு இவ்விஷயத்தில் நாம் மிகவும் அசைக்கப்பட்டிருக்கிறேன்:

> *ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம்*

நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.

சரித்திரத்திலிருந்து தேவன் எதை பெற்றுக்கொள்ள தீர்மானித்திருக்கிறார் ? "நற்கிரியைகளைச் செய்ய பக்திவை ராக்கியமுள்ள, தமக்குரிய சொந்த ஜனம்." ஆகையால் தான், பொல்லாப்பு தன்னுடைய முழு ஓட்டத்தையியும் ஓடும் வரைக்கும் தேவன் முடிவில்லா பொறுமையுடன் காத்திக்கொண்டிருக்கிறார் - ஏனென்றால், யூதரிலும் புறஜாதியாரிலும் தேவன் தெரிந்தெடுக்கப்பட்ட மீதியான ஒரு கூட்டத்தை வைத்திருக்கிறார். அவர்களில் ஒவ்வொருவனும் இயேசுவின் மூலம் தம்மிடத்தில் வரும் வரை, ஆண்டவர் சரித்திரத்தை முடிவுக்கு வர அனுமதிக்கமாட்டார்.

நீங்கள் இஸ்ரவேலுக்காக ஜெபிக்கும் போது, அரசியல் விஷயங்களுக்காக ஜெபித்து துவக்கம் செய்யாதீர். நீங்கள் விரும்பினால் அப்படி செய்யலாம், ஆனால் அது தேவனுடைய முக்கிய கவலையில்லை என்பதை தயவு செய்து புரிந்துக்கொள்ளுங்கள். முக்கியமானது என்னவென்றால், தேவன் தேடும் அந்த விசேஷித்த ஜனமாக இஸ்ரவேல் மாறுவது தான். அவர் விரும்பும் அந்த விசேஷித்த ஜனத்தை அவர் பெறும் வரைக்கும், ஆண்டவர் இந்த விஷயத்தில் தான் செயல்பட்டுக்கொண்டிருப்பார்.

அதிகாரம் 18
இஸ்ரவேலுக்கு பாதுகாப்பு

எருசலேமில் சிலகாலம் வாழ்ந்தபடியால், ரூத்தும் நானும் தொடர்ந்து இஸ்ரவேலின் பாதுகாப்புக்காக ஜெபிப்பதுண்டு. நாங்கள் ஜெபிக்கும் ஜெபங்களில் ஒன்று சங்கீதம் 17:7-9ல் உள்ளது. இதை நாங்கள் அறிக்கை செய்யும் போது அதை சொந்தப்படுத்திக்கொள்வோம்.

உம்மை நம்புகிறவர்களை அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களினின்று உமது வலதுகரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே! உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணும். கண்மணியைப்போல் [இஸ்ரவேலை] காத்தருளும். [அதை] ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், சூழ்ந்துக்கொள்ளுகிற பிராணப்பகைஞருக்கும் மறைவாக, உம்முடைய செட்டைகளின் நிழலிலே இஸ்ரவேலை காப்பாற்றும்.

வேதத்தில் ஜெபத்திற்கு ஒரு நல்ல அஸ்திபாரத்தை கொடுக்கும் வேறு இரண்டு பகுதிகள் சங்கீதங்களில் உள்ளன. முதலாவது பகுதி சங்கீதம் 125:3ல் உள்ளது:

ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது.

''ஆகாமியத்தின் கொடுங்கோல்'' என்றால் என்ன ? அது இஸ்லாம். அப்படி இருக்கும் போது, வேதம் கூறுகிறது நீதிமானுக்கு கொடுக்கப்பட்டுள்ள தேசத்தின் மேல் அது நிலைத்திருக்காது - இஸ்லாமின் வல்லமை நீதிமான்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் மேல் தொடர்ந்து ஆதிக்கம் செய்ய முடியாது. இந்த வசனத்தை கொண்டு ஜெபிக்கும் போது, இஸ்ரவேலை தேவன் அதே சமயத்தில், தம்முடைய திட்டத்தின்படி, நீதியிள்ளவர்களாக

மாற்றிக்கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துக்கொள்வது அவசியம். இது ஒரு இரட்டை திட்டம். நம்முடைய ஜெபங்களால் அதை தொடர்ந்து நாம் உறுதி செய்கிறோம்.

சீயோனை வெறுக்கிறவர்கள்

நாங்கள் அறிக்கை செய்யும் இன்னொரு வசனம் சங்கீதம் 129:5-6:

> *சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப் பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள். வீட்டின்மேல் முளைக்கும் புல்லுக்கு அவர்கள் ஒப்பாவார்களாக; அது வளருமுன் உலர்ந்துபோம்.*

இந்த வசனத்தில் எந்த ஜாதியை குறித்தோ, சபை பிரிவை குறித்தோ ஆண்டவர் பேசவில்லை என்பதை கவனியுங்கள். இங்கே, "சீயோனை பகைக்கிற அனைவரும்" என்று தேவன் கூறுகிறார். அவர்கள் கிறிஸ்தவர்களா, இஸ்லாமியரா, புத்த மதத்தினரா, இந்துக்களா வேறு எந்த மதப்பிரிவினரா, தேசமா என்பது முக்கியமல்ல. தேவன் ஒரு தேசத்திற்கு விரோதமானவர் அல்ல; அவர் ஒரு சபை பிரிவிற்கு விரோதமானவர் அல்ல; அவர் எந்த மதத்திற்கும் எதிரி அல்ல. ஆனால், அவர் சீயோனை, வெறுக்கிற, பகைக்கிற யாவருக்கும் விரோதியாக இருக்கிறார். அவர்கள் அவருக்கு முன் உலர்ந்து போவார்கள். அவர்களுடைய அழிவு முத்தரிக்கப்பட்டுள்ளது.

ஜெபிக்கும் போது, நீங்கள் ஆயத்தமாகக்கூடிய மிக சிறந்த விதங்களில் ஒன்று, மேற்கூறப்பட்ட வசனத்தை போன்றவற்றை மனப்பாடம் செய்வது தான். நீங்கள் செய்யக்கூடிய மிக சிறந்த ஜெபத்தை சார்ந்துக்கொள்வதை விட, இந்த மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்கள் இஸ்ரவேலுக்காக நாம் விசுவாசத்துடன் அறிக்கை மற்றும் ஜெபம் செய்ய உதவுகின்றன. இது ஏன் இவ்வளவு வல்லமையுள்ளது ?

ஏனென்றால் நாம் அறிக்கை செய்து, ஜெபிக்கும் போது, தேவன் தம்முடைய வார்த்தையை நிறைவேற்ற விரும்புகிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

அதிகாரம் 19

இருதயத்தின் ஒரு அழுகுரல்

இஸ்ரவேலை குறித்த அடுத்த ஜெப கருப்பொருளை உறுதி செய்யும் முன், நாம் “தேவன் எதற்காக காத்திருக்கிறார் ?" என்ற கேள்வியை நம்மிடம் கேட்க வேண்டும். நாம் ஏற்கெனவே விவாதித்தது போல, யூத மக்களிடமிருந்து ஒரு இருதயத்திலிருந்து வரும் அழுகுரலை கேட்க தேவன் காத்திருக்கிறார். யூத மக்களிடமிருந்து ஒரு அழுகுரலை பரிசுத்த ஆவியானவர் எழும்பப்பண்ண வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும்.

கிருபையுள்ள நம்முடைய தேவன்

இந்த கோட்பாடை குறித்த ஒரு அருமையான உட்பார்வை ஏசாயா 30:18-19 வசனங்களில் உள்ளது:

> *ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார்,*

தேவன் காத்திருப்பதற்கு காரணம், அவர் உங்களுக்கு இரக்கம் காட்ட விரும்புகிறார். அவர் அநேக காலங்கள் உங்களை காத்திருக்க செய்யலாம், ஆனால் முடிவிலே அவர் உங்களுக்கு இரங்குவார்.

> *உங்கள்மேல மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள். (யார் பாக்கியவான்கள்? அவருக்கு காத்திருக்கும் அனைவரும்.) சீயோனைச் சேர்ந்த ஜனங்கள் எருசலேமில் வாசமாயிருப்பார்கள்; (இது யூதர்களின் மறுவருகையை குறித்த தீர்க்கதரிசனம்) இனி நீ அழுதுகொண்டிராய்; உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு*

அவர் உருக்கமாய் இரங்கி அதைக் கேட்டவுடனே உனக்கு மறு உத்தரவு அருளுவார்.

தேவன் யூத மக்களின் இருதயத்தின் அழுகுரலின் சத்தத்திற்காக காத்திருக்கிறார். ஆகையால் தான், பரிசுத்த ஆவியானவர் அந்த அழுகுரலை அவர்கள் இருதயத்தில் வைக்க வேண்டும் என்று நாம் ஜெபிப்பது அவசியம்.

அதிகாரம் 20
எருசலேமின் சமாதானம்

இஸ்ரவேலுக்கான குறிப்பான ஜெபங்களை குறித்த நம்முடைய கலந்தாய்வை தொடர்ந்து, இன்னொரு வெளிப்படையான ஜெபமுள்ளது, அதை நீங்கள் அறிந்திருக்கலாம். அது சங்கீதம் 122:6ல் உள்ளது:

> *எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; "உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக."*

அவ்வாக்கியத்தின் இரண்டாம் பகுதியை சில மக்கள் ஜெபத்தின் பகுதியாக கருதுகின்றனர். ஆனால் அது தேவனுடைய பலனளிப்பின் பங்காக இருக்கிறது. இஸ்ரவேலை நீங்கள் நேசித்து, அதின் சமாதானத்திற்காக ஜெபிக்கும் போது நீங்கள் சுகித்திருப்பீர்கள்.

தேவனுடைய தீர்க்கதரிசன நோக்கங்கள்

நாம் எருசலேமின் சமாதானத்திற்காக ஜெபிக்கும்போது, தேவனுடைய தீர்க்கதரிசன நோக்கங்களின் அறிவு நிறைந்த புரிந்துக்கொள்ளுதலுடன் ஜெபிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஜெபத்தின் அர்த்தம், எருசலேமின் மீது ஒரு சமாதானம் வந்து, எல்லாரும் சண்டை போடுவதை நிறுத்திவிடுவார்கள் என்பது அல்ல. அப்படி அல்லவே அல்ல. தேவனுடைய நோக்கங்களின்படி எருசலேமுக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் திட்டம் செயல்படுத்தப்படும் வரை நாம் ஜெபிக்க வேண்டியது அவசியம் என்பதே அர்த்தம்.

சமாதானபிரபு வரும் வரை, எருசலேம் சமாதானத்தை அறிய முடியாது என்பதே இதில் மறைந்திருக்கும் உண்மை. நீங்கள் ஃபீனிக்ஸ், துபாய் அல்லது பெய்ஜிங்கில்

வாழ்ந்துக்கொண்டு, ‘‘நான் ஏன் எருசலேமின் சமாதானத்திற்காக ஜெபிக்க வேண்டும் ?" என்று கேட்கலாம். உங்கள் கேள்விக்கான பதில் என்னவென்றால், நான் புரிந்துக்கொண்ட வரை, எருசலேமுக்கு சமாதானம் உண்டாகும் வரை, பூமியில் வேறெந்த பட்டணமும் நிரந்தர சமாதானத்தை அறிய முடியாது. நீங்கள் எருசலேமின் சமாதானத்திற்காக ஜெபிக்கும் போது, நீங்கள் வாழும் பட்டணத்தின் சமாதானத்திற்காகவும் ஜெபிக்கின்றீர்கள்.

சங்கீதம் 122:6ன் கட்டளை மிக தெளிவாக உள்ளது: நாம் எருசலேமின் சமாதானத்திற்கு ஜெபிக்க வேண்டும்.

அதிகாரம் 21
ஆசீர்வதியுங்கள் – ஆசீர்வதிக்கப்படுங்கள்!

இஸ்ரவேலுக்கான குறிப்பான ஜெபங்களில், நான் அடுத்து முன் வைக்கக்கூடிய பரிந்துரை, இந்த சொற்றொடரில் அடங்கி உள்ளது: ஆசீர்வதியுங்கள், ஆசீர்வதிக்கப்படுங்கள். இந்த அனுமானத்திற்கு ஆதாரமாக இருக்கும் ஒரு உதாரணத்தை காண, நாம் எண்ணாகமம் 24க்கு திருப்பி, தீர்க்கதரிசியாகிய பிலேயாமின் கதையை கவனிப்போம். அவன் புறஜாதி ராஜாவான பாலாக்கினால், இஸ்ரவேலை சபிக்க கூலியமர்த்தப்பட்டவன்.

இஸ்ரவேலர்களை சபிக்க, தன்னால் இயன்ற எல்லாவற்றையும் பிலேயாம் செய்தார் ஆனால், மேற்கொண்டு ஆளுகை செய்யும் கர்த்தரின் கரத்தின் கீழ், ஒவ்வொரு முறையும் அவர்களை இன்னும் அதிகம் அதிகம் ஆசீர்வதித்தே ஓய்ந்தான். எவ்வளவு அதிகமாக ஒவ்வொரு முறையும் சபிக்க முற்பட்டானோ, அவன் ஆசீர்வதித்தே தீர்ந்தான். 9ம் வசனத்தில் பிலேயாமின் இறுதி வார்த்தைகளை நாம் பார்க்கின்றோம். இஸ்ரவேலோடு பேசுகையில் அவன் கூறுவது:

> *உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்,*
> *உங்களைச் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன்.*

தேவன் நமக்கொரு தேர்வை கொடுத்திருக்கிறார். நாம் ஆசீர்வாதத்தை பெறலாம் அல்லது சாபத்தையும் பெறலாம். இஸ்ரவேலை நீங்கள் ஆசீர்வதித்தால், தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். ஆனால் நீங்கள் இஸ்ரவேலை சபித்தால், தேவன் உங்களை சபிப்பார்.

ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள், நீங்கள் தேர்ந்தெடுக்கலாம், என்ற என்னுடைய புத்தகத்தில், நாம் முதலில் முன்வைத்த கருத்து, நீங்கள் சாபத்தின் கீழ் இருக்கிறீர்களா அல்லது ஆசீர்வாதத்தின் கீழ் இருக்கிறீர்களா என்பதை கண்டடைவது எப்படி ? அடுத்து நான் விவாதித்த கருபொருள்: சாபத்திலிருந்து விடுதலை பெற்று, ஆசீர்வாதத்தினுள் பிரவேசிப்பது எப்படி. அந்த கருப்பொருளில் நாம் அளிக்கும் ஊக்கத்தில், சாபத்திற்கான் மிக பொதுவான காரணங்களை நான் ஆலோசித்தேன். மிக பொதுவான மற்றும் அழிவுக்கும் ஏதுவான காரணங்களில் ஒன்று, யூதரை விரோதித்தல் ஆகும். அது தேவனுடைய சாபத்தை ஒரு தனி நபர் மீது, ஒரு சமுதாயத்தின் மீது, ஒரு சபையின் மீது, அல்லது ஒரு தேசத்தின் மீது கொண்டு வரக்கூடும். அதை விளக்கும் வண்ணமாக, என்னுடைய தனிப்பட்ட நண்பனான ஒரு பாலஸ்தீனனுடைய கதையை நான் எடுத்து கூறினேன்.

அவன் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு குடிப்பெயர்ந்து, வியாபரம் துவங்கி, மிகுந்த வெற்றியிள்ளவனாக மாறினான். அதற்கு பின் அவன் திவாலானான். அந்த அனுபவத்தின் ஊடாக, அவன் கர்த்தரை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியையும் பெற்றான். உடனடியாக தேவன் அவனோடு இடைப்பட ஆரம்பித்தார் - அவனுடைய பொருளாதாரத்தை குறித்து மட்டுமல்ல, அவனுடைய யூதர் விரோத போக்கைக் குறித்தும் இடைப்பட்டார். இறுதியாக, தனது அரபிய பின்னணியின் நிமித்தமாக, யூதருக்கு விரோதமாக எப்போதும் அவனுக்குள் கோபம் இருந்ததை அவன் உணர்ந்தான் - எந்த அளவு என்றால், அவர்களை சபிக்கும் அளவிற்கு. தன் மீதும், தன் குடும்பத்தின் மீதும் இந்த செயல், ஒரு சாபத்தை கொண்டு வந்தது என்பதை உணர்ந்தான்.

ஒருநாள், தேவ சமூகத்தில், "என் இருதயத்தில் யூத மக்களுக்கு விரோதமாக இருக்கும் எந்த கோபத்தையும், நான் நிராகரிக்கிறேன். அவர்களை நான் மன்னிக்கிறேன்." என்று கூறினான். உடனே அவனுக்குள் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்தது. தன்னுடைய பொருளாதாரம் ஆசீர்வாதத்தின் கீழ்அல்ல, சாபத்தின் கீழ் இருந்து வந்துள்ளதை அவன் உணர்ந்துக்கொண்டான் - பற்றாகுறையின் சாபம் அது.

அவன் யூதரை விரோதித்தல் என்ற சாபத்திலிருந்து விடுதலை பெற்ற போது (அதினோடு இணைந்திருந்த பற்றாகுறையின் சாபத்தோடு கூட), அவனுடைய வருமானம் அதிகரிக்க ஆரம்பித்தது. அதின் நிமித்தம் தேவனுடைய ராஜ்யத்தின் பணிகளுக்கு அவன் தாராளமாய் கொடுக்க ஆரம்பித்தான். யூதரை சபித்தல் பிரயோஜனமற்றது என்பதற்கு அவனுடைய அற்புதமான சாட்சி, ஒரு தெளிவான எடுத்துக்காட்டாக உள்ளது.

அவர்களுக்கு விரோதமாக கோபம் கொள்வதால் பிரயோஜனம் இல்லை. நாம் ஆசீர்வதிக்கப்பட விரும்பினால், நாம் இஸ்ரவேலை ஆசீர்வதிக்க வேண்டும். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பது, ஒரு விதத்தில் சொன்னால், வெளிப்பாடுள்ள சுயநலமாக உள்ளது. நாம் ஜெபிக்கும் போது, இஸ்ரவேலை ஆசீர்வதிக்கும் ஒரு அற்புதமான தருணத்தை பெறுகின்றோம். அவர்களை இவ்விதமாய் ஆசீர்வதிப்பது, தேவன் நம்மை ஆசீர்வதிப்பதற்கு வழி வகுக்கின்றது. இஸ்ரவேலுக்கான குறிப்பான ஜெபங்களை குறித்து சொல்லும் போது, நீங்கள் இந்த காரியத்தை நினைவிற்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்: இஸ்ரவேலை ஆசீர்வதிப்பது, அவர்களை ஒரு தேசமாக ஆசீர்வதிப்பது மட்டுமல்ல, அது உங்கள் மீது ஆசீர்வாதங்களை திரும்பி வர செய்கிறது.

அதிகாரம் 22
அறிக்கையிடுங்கள்!

இஸ்ரவேலுக்காக, குறிப்பான ஜெபங்களை ஏறெடுக்கும் இந்த பழக்கத்திற்குள் நீங்கள் விசுவாசத்தினால் அடி எடுத்து வைக்கும் போது, நீங்கள் ஆவியின் பட்டயத்தை தைரியத்தோடு கையில் எடுத்துக்கொள்ள உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். அறிக்கை செய்யுங்கள் ! இஸ்ரவேலின் சார்பாக நீங்கள் செய்யக்கூடிய செயல்களில் இது மிக வல்லமையான ஒன்று.

முன்வந்த அதிகாரங்களில், அறிக்கையின் பயன்பாட்டை குறித்து நாம் பார்த்திருக்கிறோம். இஸ்ரவேலின் பாதுகாப்பிற்காக ஜெபிப்பதில் அதின் வல்லமையை விவாதித்தோம். ஆனால், அறிக்கை என்பது அந்த ஒரு பகுதிக்கு மட்டுமல்ல. தேவனுடைய வார்த்தையை செயலாக்கும் ஜெபத்தை ஏறெடுப்பது எப்படி என்பதை இந்த அதிகாரத்தில் நான் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன்.

குறிப்பிட்ட அறிக்கைகள்

பின்வரும் பகுதியில், ரூத்தும் நானும் தொடர்ந்து இஸ்ரவேலுக்காக பயன்படுத்துல் அறிக்கைகளின் மாதிரியை முன்வைக்க விரும்புகிறேன்.

முதலாவது அறிக்கை சங்கீதம் 33:8-12லிருந்து எடுக்கப்பட்டுள்ளது:

> *பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக; உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குவார்.*

கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும். கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துக்கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

அந்த ஜனத்தின் பெயர் இஸ்ரவேல். தேவனுடைய திட்டத்திற்கு விரோதமாக, ஜாதிகள் இஸ்ரவேலுக்கு திட்டமிடும் யாவும் நிறைவேறாது.

எரேமியா 31:10ல் அந்த வசனத்தின் ஒரு பகுதி இப்படியாக சொல்லுகிறது:

இஸ்ரவேலை சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மெய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக் காப்பார்.

இந்த பகுதியை மறுபடியும் வாசிக்க, நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். இது சிரிய பகுதி ஆனால் வல்லமையுள்ளது. மறுபடியும் கூட்டிச்சேர்க்கப்பட்ட இஸ்ரவேல், இறுதியில் பாதுகாப்பாக இருக்கிறது - தேவன் அவர்களை கூட்டிச்சேர்த்ததினால் மட்டுமல்ல, அவர் அவர்களை பாதுகாக்க வாக்களித்ததினாலுமே.

இந்த வசனங்களை இப்புத்தகத்திலுள்ள மற்றவைகளுடன் இணைத்து பார்க்கும் போது, நீங்கள் செய்யகூடிய அறிக்கைகளின் பட்டியல் கிடைக்கும். இது இஸ்ரவேலுக்காக செய்யும் அறிக்கைகளின் தீர்க்கமான பட்டியலுமல்ல, இறுதியானதும் அல்ல. நீங்கள் இன்னும் அநேகவற்றை கண்டுபிடிக்கலாம்.

இஸ்ரவேலின் ஏதோ ஒரு சூழ்நிலையை குறித்து நீங்கள் ஜெபிக்க விரும்பினால், அதற்கேற்ற வசனங்களை அறிக்கையிடுவதற்கு, தேவன் அவைகளை உங்களுக்கு

காண்பிக்கும் படி கேளுங்கள். அறிக்கை செய்யும் இப்பழக்கத்தின் வழியாக, தேவன் கட்டவிழ்க்கும் வல்லமைக்கு எல்லையே இல்லை.

அதிகாரம் 23
இஸ்ரவேலுக்காக தேவனுடைய இருதயம்

கடந்த சில அதிகாரங்களில், இஸ்ரவேலுக்காக குறிப்பான ஜெபங்களையும் அறிக்கைகளையும் செய்வதை குறித்து நாம் பேசினோம். ஆனால் அதை செய்ய நாம் உண்மையில் ஆயத்தமா ? வாழ்வை மாற்றும் இம்மா பணிக்குள் நாம் நுழையும் முன், நம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்த, நாம் எடுக்க வேண்டிய ஒரு முதல் படி இருக்கலாம்.

உங்களுக்கு சம்மதமா?

இந்த நொடியில் நான் உங்களை இந்த கேள்வி கேட்க விரும்புகிறேன்: யூத மக்களுக்கான தன்னுடைய கரிசனையை இயேசு உங்களுக்கு தர வேண்டுமென்று நீங்கள் அவரிடம் கேட்க ஆயத்தமா ? இயேசுவின் நாமத்தில் யூதருக்கு விரோதமாக இழைக்கப்பட்ட கொடுமையான பொல்லாப்பை நீங்கள் ஒத்துக்கொள்ள ஆயத்தமா ? மூழ்கடிக்கும் அலையை போல் தொடரும் பாரபட்சங்களுக்காக நீங்கள் அறிக்கையிட்டு, மனந்திரும்ப ஆயத்தமா ?

ஏதோ ஒரு விதமான திருப்புமுனை - ஒரு உடைப்பு ஏற்பட வேண்டிய அவசியம் உள்ளது. அநேக கிறிஸ்தவர்களும், சபையின் பெரும்பகுதியும், கைகளை கட்டிக்கொண்டு யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் மிக கடினமாக, அடைக்கப்பட்டு, நம்முடைய உணர்வுகளை வெளியே காண்பிக்க பயந்து நிற்கிறோம். அந்த சூழ்நிலைக்கான இயேசுவின் உணர்வுகளுக்குள் நுழைய நாம் பயந்து நிற்கிறோம். நாம் ஜெபிக்கும் எந்த சூழ்நிலைக்கும், கிறிஸ்துவின் பாரத்தை பகிர்ந்துக்கொள்ளாமல்,

உண்மையான பரிந்து பேசி ஜெபிக்கிறவர்களாக இருக்க முடியாது.

நம்முடைய ஆராய்வின் இப்பகுதியில், நாம் இதுவரை கற்றுக்கொண்டவைகளை பயன்பாட்டில் கொண்டுவந்து, அலட்சியத்தை அகற்றி, அறிக்கை செய்து மன்னிப்பு கேட்போம் என்று ஆலோசனை கூற விரும்புகிறேன். தேவனுக்கு முன்பாக நம்மை தாழ்த்தி, “தேவனே நா ங்கள் பாவம் செய்தோம். நாங்கள் யூத மக்களுடைய இரத்தத்தை குறித்து குற்றமுள்ளவர்களானோம். பதினாறு நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவ சபையாகிய நாங்கள் கூட்டாக யூத விரோத போக்கை மூண்டி அதை பரப்பியுள்ளோம்." என்று கூறுவோம். இந்த தொடரை ஆரம்பிக்க, இதோ ஒரு ஜெபம்:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, சரீரமாகிய சபைக்கு எல்லாவற்றிற்கும் மேலான தலையானவரே. யூத மக்களின் வேதனைகளில் எங்கள் சொல்லிமுடியாத குற்றத்தை, வெட்கத்தோடும் துக்கத்தோடும், உமக்கு முன்நின்று ஒப்புக்கொள்கிறோம். எங்கள்மேல் வந்துள்ள குற்ற உணர்வு மற்றும் துக்கத்தை வெளியே சொல்ல வழியில்லை ஆண்டவரே.

இப்போதும், எங்கள் சொந்த பாவங்களை மட்டுமல்ல, கிறிஸ்தவ சபையின் மொத்த பாவத்திற்காகவும், நாங்கள் உமக்கு முன் நிற்கிறோம். நாங்கள் எந்த பிரிவினரையோ, சபை பிரிவையோ குறிப்பிடவில்லை. நாங்கள் முழு சபையின் சார்பாகவும் மனந்திரும்புகிறோம். எங்களுடைய அலட்சிய போக்கிற்காக உமக்கு முன் வருந்துகிறோம். எங்களுடைய கடினத்தின் நிமித்தமும், பொருள்முதல்வாதத்தின் நிமித்தமும் நாங்கள் வெட்கம் அடைகிறோம் தேவனே.

உம்முடைய இராஜ்யத்தின் நலன்களுக்கும், உமது இருதயத்தின் விருப்பங்களுக்கும், எங்களுக்கும் இடையே எத்தனையோ தடைகள் வர அனுமதித்து விட்டோம்.

எங்களை மன்னியும் தேவனே. எங்கள் பாவங்களை மேகத்தை போலவும், மீறுதல்களை அடர்ந்த மேகத்தை போலவும் அகற்றும். உம்முடைய இரக்கத்தினாலே அவைகளை அகற்றும். யூத விரோத போக்கினால், இத்தேசத்திலுள்ள சபையின் மீது நிழலிட்டிருக்கும் இருண்ட மேகத்தை அகற்றிவிடும். உம்முடைய ஆசீர்வாதம் ஊற்றப்படுவதை தடை செய்யும் அந்த இருண்ட மேகத்தை அகற்றும். அதை அகற்றும் ஆண்டவரே. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம்.

கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் மீண்டும் எங்கள் மீது ஊற்ற வேண்டும் என்று கேட்கிறோம் ஆண்டவரே. எங்கள் மீது உம்முடைய ஆவியை கட்டவிழ்த்துவிடும், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

நீங்கள் யூதரல்லாதவர்களாக இருந்தால், உங்கள் துக்கத்தையும் மனந்திரும்புதலையும் அறிக்கையிட, தருணத்தை எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் தொடர்ந்து ஜெபிக்கையில், உங்கள் இருதயத்தை தேவனுக்கு திறந்து கொடுங்கள். தன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கான தம்முடைய இருதயத்தை தேவன் உங்களுக்கு அருள வேண்டும் என ஜெபம் செய்யுங்கள்.

அவசரப்பட வேண்டாம். தேவனுக்கு காத்திருங்கள். நீங்கள் ஒரு விடுதலையை காணும் வரை ஜெபம் பண்ணுங்கள்.

அதிகாரம் 24
ஒரு மேலான தரிசனம்

இந்த செய்தியின் முடிவுக்கு நாம் வந்திருக்கையில், “என் தரிசனம்" என்று நான் அழைக்க விரும்பும் பகுதியுடன் நிறைவு செய்ய விரும்புகிறேன். இது என் உள்ளுணர்வை சார்ந்த ஒரு காரியமாயினும், இது உங்கள் இருதயத்தோடு பேசும் என்ற நம்பிக்கையுடன் அதை பகிர்ந்து கொள்ள வாஞ்சிக்கிறேன்.

நான் எருசலேமில் வாழ்ந்துக்கொண்டிருந்த காலத்தில், ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலையும், ஜெபிப்பதற்கு ஒரு ஆண்கள் குழுவுடன் கூடி வருவேன். இவர்களில் பெரும்பாலானோர் யூதர்கள் - சிலர் யூதர் அல்ல. இஸ்ரவேலில் நடந்துக்கொண்டிருந்த அரசியல் மாற்றங்களை குறித்து எங்களுக்கு ஆழ்ந்த வருத்தம் உண்டாகிக்கொண்டிருந்தது. அநேக நேரங்களில், “அரசாங்கம் இதை செய்ய அனுமதிக்காதீர்'' அல்லது ‘‘அரசாங்கம் அதை செய்ய அனுமதிக்காதீர்'' என்று நாங்கள் ஆண்டவரை வேண்டிக்கொள்வோம். சில காலம் கழித்து, நாங்கள் எதிர்வினையிலிருந்து ஜெபித்துக்கொண்டிருந்தோம் என்பதை நான் உணர்ந்தேன். துவக்கும் முயற்சி, வேறுயாருடையதாகவொ இருந்தது, நாங்கள் அதற்கு மறுமொழிக்கொடுத்துக் கொண்டிருந்தோம்.

தடைகளை நீக்கிப்போடுபவர்

இந்த எதிர்வினையாற்றும் நிலையை நான் சிந்தித்துக்கொண்டிருந்த போது, ‘‘தேவன் இவ்வளவு தான் செய்கிறார் என்று நான் நம்புகிறதில்லை. தேவன் வெறும் எதிர்வினையாற்றுபவர் மட்டும் அல்ல, அவர் தான் காரியத்தை துவக்குகிறார்'' என்று நான் எனக்கே

கூறிக்கொண்டேன். தேவன் என்ன செய்ய போகிறார் என்று நான் அவரிடம் கேட்க ஆரம்பித்த போது, மீகா 2:13ல் உள்ள ஒரு வசனம் எனக்கு வந்தது. "தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்...அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாக போவார்" என்று அவ்வசனம் கூறியது. நான் நினைத்தேன், "அது சரி தான். தேவன் தடைகளை நீக்கிப் போடுகிறவர். அவர் அரசியலை காட்டிலும் மேலான தளத்தில் அசைவாடுகிறார். அவர் உடைப்பை ஏற்படுத்தும் போது, மெய்யாகவே ஒரு திறப்பு ஏற்படுகிறது."

இந்த எண்ணத்தை நான் சிந்தித்துக்கொண்டிருக்கும் போது, அடுத்த கேள்வியை அது எனக்குள் எழுப்பிற்று, "எந்த மேலான தளத்தில் தேவன் தகர்ப்பை ஏற்படுத்துவார் ?" இந்த கேள்விக்கு பதிலாக, தேவன் எனக்கு இந்த பதிலை கொடுப்பதை நான் உணர்ந்தேன்: ஜெபம், பரிந்து மன்றாடுதல் மற்றும் ஆவிக்குரிய போராட்டம்.

ஒரு மேலான தளம்

ஜெபம், பரிந்து மன்றாடுதல் மற்றும் ஆவிக்குரிய போராட்டம் என்ற அத்தளத்தில், அரசியல், தலைவர்கள் அல்லது சர்வாதிகாரிகள் செய்ய கூடிய எதையும் விட நாம் உயர்வாக செல்கிறோம். அந்த மேலான தளத்தில் தான் வெற்றி இருக்கிறது. நாம் சும்மா உட்கார்ந்துக்கொண்டு, கைகளை உதறி, "ஐயோ, அடுத்து என்ன ?" என்று சொல்ல தேவை இல்லை. நாம் முதல் அடிகளை எடுத்து வைக்க வேண்டும் என இயேசு விரும்புகிறார் - ஆனால் அது அவரிடமிருந்து துவங்க வேண்டும். அவரே சபைக்கு தலையாக இருக்கிறார். துவக்கம் செய்யும் முயற்சி, அவரிடமிருந்து வருகிறது.

யூத மக்களுக்கு, புறஜாதி கிறிஸ்தவர்களின் கடனை குறித்து நான் யோசித்துக்கொண்டிருந்த போது, இந்த சிந்தை எனக்கு வந்தது: நம்முடைய கடனை திரும்ப செலுத்த ஆரம்பிப்பதற்கு, இஸ்ரவேலுக்காக, அவர்கள் தேசத்திற்காக, அவர்கள் எதிகாலத்திற்காக பரிந்து மன்றாடி ஜெபிப்பதன் மூலம் அதை செய்யலாம்.

எனக்கு அனேக தரிசனங்கள் உண்டாவதில்லை. ஆனால், நீங்கள் உங்களை பார்த்து, ''தேவன் என்னையோ, நான் இணைந்திருக்கும் குழுவையோ, இஸ்ரவேலுக்காக ஜெபயுத்தம் செய்ய அழைக்கிறாரா ?'' என்று கேட்க வேண்டும் என்ற சவாலை உங்கள் முன் வைக்கிறேன்.

அந்த ஜெபயுத்த தளம் தான் நாம் வெற்றியை காணக்கூடிய தளமாக இருக்கிறது. அதை அரசியல் நகர்விகளால் நாம் பெற முடியாது. அதை பொருளாதாரத்தை கொண்டும் ஜெயிக்க முடியாது. அதை போராயுதங்களை கொண்டும் ஜெயிக்க முடியாது. மாறாக சத்துரு அடைய கூடிய எந்த நிலையயும் விட, உயர்வான தளத்தில் நம்மால் செயலாற்ற முடியும் - பரிந்து மன்றாடுதலின் தளம்.

ஓர் அழைப்பு

இந்த புத்தகத்தை வாசிக்கையில், யூத மக்களை குறுத்தும், இஸ்ரவேலை குறித்தும் உங்கள் இருதயத்தில் ஒரு மூண்டுதல் ஏற்பட்டுள்ளதா ? இஸ்ரவேலுக்காக ஜெபித்தல் என்ற உங்கள் வேதாகம பொறுப்பை குறித்த புரிதலில் நீங்கள் வளர்ச்சி அடைய அடைய, இன்னும் அதிகம் செய்ய வேண்டும் என விரும்புகிறீர்களா ? நாம் யூத மக்களுக்கு பட்டிருக்கும் கணக்கிலடங்கா கடனை, ஒரு வேலை முதல் முறையாக புரிந்துக்கொண்டுள்ளீர்களா ?

இக்கேள்விகளுக்கு, ஒரு பலமான ''ஆம்'' என்பது உங்கள் பதிலாய் இருக்குமாயின், பின் வரும் ஜெபத்தை

என்னுடன் செய்ய உங்களை அழைக்கிறேன். இப்படி செய்வதால், நாம் யாராயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோமோ - இஸ்ரவேலுக்காகவும், யூத மக்களுக்காகவும் பரிந்து மன்றாடுகிறவர்களாக - இருக்க தேவன் நமக்கு உதவி செய்யும்படி வேண்டிக்கொள்வோம். அப்படி செய்வதால், கிறிஸ்துவின் வருகைக்கான வழியையும் நாம் ஆயத்தம் செய்வோம் - அப்போஸ்தலான யோவானுடன், "ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று சொல்லக் கூடியவர்களாவோம் (வெளிப்படுத்தல் 22:20).

அப்பா, "நன்றி!" என்று கூறி ஆரம்பிக்கிறேன். இஸ்ரவேலுக்காக நன்றி - மக்களுக்காகவும், தேசத்திற்காகவும் நன்றி. உம்முடைய ஜனத்திற்காக, அந்த தேசத்தை தெரிந்தெடுத்து, எந்த நிலையிலும் உம்முடைய வார்த்தையை உயர்த்தி பிடிப்பீர் என்பதற்காக நன்றி.

இஸ்ரவேலின் பெத்லகேமில் ஒரு யூத தாய்க்கு பிறந்த நம்முடைய இரட்சகரான, யெஷுவா மேசியாவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலினால், எனக்கு கிடைக்கும் உம்முடைய இரட்சிப்பிற்காக நன்றி.

பல நூற்றாண்டுகளாக, யூத மக்கள் அனுபவித்து வந்த துன்புறுத்தல்களை எங்கள் கவனத்திற்கு கொண்டு வந்ததற்காக நன்றி. அது விரும்ப தகாததானதால், அதை மறந்துப்போக விடாமல், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்காக நாங்கள் ஜெபம், பரிந்து மன்றாட்டு மற்றும் நடைமுறை உதவிகளை செய்ய மீண்டும் ஒன்றாக அதை பயன்படுத்துகிறோம்.

உடன்படிக்கையினால் நீர் இஸ்ரவேலுக்கு கொடுத்த தேசத்திற்கு அவர்களை திரும்ப கூட்டி சேர்க்கும்

விதத்திற்காக நன்றி. உம்முடைய ஜனத்தின் சீரமைப்பு மற்றும் அவர்களுடைய இருதயம் மென்மையடைவதற்காக சகல மகிமையும் உமக்கே உண்டாகட்டும்.

உம்முடைய நோக்கங்களும் சித்தமும் எங்களுக்குள்ளும், எங்கள் மூலமாயும் செய்யப்பட, இந்த ஜெபத்தின் மூலம் இப்போது நாங்கள் எங்களை பூரணமாய் சமர்ப்பிக்கிறோம். இஸ்ரவேலுக்காக பரிந்து மன்றாட, எங்களுக்கு போதியும், நினைப்பூட்டும், ஆயத்தப்படுத்தும். ரோமர் 11:12ல் பவுல் சொன்ன வார்த்தைகளை நாங்கள் ஜெபிக்கும் போது நினைவுகூற உதவி செய்யும்:

“அவர்களுடைய (யூதருடைய) தவறு உலகத்திற்கு ஐசுவரியமும், அவர்களுடைய குறைவு புறஜாதிகளுக்கு ஐசுவரியமுமாயிருக்க, அவர்களுடைய நிறைவு எவ்வளவு அதிகமாய் அப்படியிருக்கும்!”

அந்த நிறைவு மற்றும் புதுப்பித்தலின் நிலைக்கு அவர்களை நீர் கொண்டு வாரும் என்று யெஷூவாவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

ஆசிரியரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் (1915–2003) பிரிட்டிஷ் பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்தார். இங்கிலாந்தின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழி அறிஞராகப் படித்த அவர், கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் பெல்லோஷிப்பைப் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஜெருசலேமில் உள்ள எபிரேய பல்கலைக்கழகத்தில் எபிரேய மற்றும் அராமிய மொழிகளை உள்ளிட்ட பல நவீன மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய போது, அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைப் பெற்றார். இந்த சந்திப்பில் இருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலில், இயேசு கிறிஸ்து உயிருடன் இருக்கிறார்; இரண்டாவதாக, பைபிள் ஒரு உண்மையான, பொருத்தமான, தற்காலத்திற்கு ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் முழு போக்கையும் மாற்றியது, பின்னர் அவர் பைபிளைப் படிப்பதிலும் கற்பிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தார்.

பைபிளையும் அதன் போதனைகளையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கும் டெரிக்கின் முக்கிய வரம், மில்லியன் கணக்கான உயிர்களில் நம்பிக்கையின் அடித்தளத்தை உருவாக்க உதவியது. அவரது சபை பிரிவு சார்பற்ற, பிரிவினைவாதம் இல்லாத அணுகுமுறை அவரது போதனையை அனைத்து இன மற்றும் மத பின்னணியிலிருந்தும் மக்களுக்குச் சமமாக பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கியுள்ளது.

அவர் 80 க்கும் மேற்பட்ட புத்தகங்கள், 600 ஆடியோ மற்றும் 110 வீடியோ போதனைகளின் ஆசிரியர் ஆவார், அவற்றில்

பல, 100க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவரது தினசரி வானொலி ஒலிபரப்பு அரபி, சீன (அமோய், கான்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), குரோஷியன், ஜெர்மன், மலகாஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவான், ஸ்பானிஷ், பஹாசா இந்தோனேசிய மற்றும் டோங்கன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வானொலி நிகழ்ச்சி தொடர்ந்து உலகம் முழுவதும் பலரைச் சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் மினிஸ்ட்ரீஸ் அவரது போதனைகளுடன் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை சென்றடைவதைத் தொடர்கிறது, 'இயேசு திரும்பும் வரை' தொடர வேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றுகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் உள்ள முதன்மைப் பணிகள் உட்பட, உலகெங்கிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது. இவை மற்றும் பிற உலகளாவிய இருப்பிடங்களைப் பற்றிய தற்போதைய தகவலுக்கு, இங்கு செல்க: www.derekprince.com

உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் இதர காரியங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

For orders, prayer requests & other enquiries
please contact :

DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

You can also send your offerings and contributions towards
this ministry to the above address.

Visit our WEBSITE:

www.derekprince.com/ta